# பயணம்

வைகாசி 1986

இதழ் 1

பாசிஸம் என்பது முதலாளித்துவம் உழைக்கும் மக்கள் மீது மிகவும் கொடூரமாக நடத்தும் தாக்குதலாகும்; கடிவாளம் இல்லாத இன வெறியும் ஆதிக்க வெறிபிடித்த யுத்தமுமாகும்; வெறிபிடித்த பிற்போக்குத்தனமும் எதிர்ப்புரட்சியுமாகும்; தொழிலாளி வர்க்கத்தின் சகல உழைக்கும் மக்களின் விரோதியுமாகும்.

தமிழீழ மக்கள் விடுதலை முன்னணியின்
அரசியல் தத்துவார்த்த ஏடு

வாசகர்களுக்கு

எமது ஸ்தாபனத்தின் குரலாக
பயணம் சஞ்சிகை
வெளிவருகின்றது.

இது எமது
போராட்டத்திற்கான பாதையை
உங்களுக்குத் தருகிறது.

இது
பயணம் முதலாவது இதழ்.

தொடர்ந்து வெளிவர
உதவிகளை
வேண்டி நிற்கிறோம்.

- ஆசிரியர் குழு

# ஆசிரியர் குறிப்பு

இன்று பாசிச U. N. P. அரசினல் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படல், உயிருடன் தீமூட்டப்படல், விமானங்களில் இருந்து குண்டு வீச்சு, துப்பாக்கிப் பிரயோகம் செய்தல் என்பன வழமையான நிகழ்ச்சிகளாகிவிட்டன. இவை தவிர பாதுகாப்பு வலயச் சட்டம், கடல் பாதுகாப்பு வலயச் சட்டம் போன்ற பயங்கரச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டு மக்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரிக்கப்பட்டு மக்கள் அன்ருட வாழ்க்கையே நடத்த முடியாத நிலை உருவாகியுள்ளது..................

எமது விடுதலை இயக்கங்களின் அண்மைக் காலங்களில் நடந்த கூட்டான தாக்குதல்கள் (குறிப்பாக வடபகுதியில்) இராணுவத்தைப் பின்வாங்க வைத்துள்ளதுடன் இராணுவ முகாம்களை விட்டு இராணுவம் வெளியேற முடியாவண்ணம் அமைந்துள்ளன. இவை தற்காப்பு நடவடிக்கையாக அமைந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இருப்பினும் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு எவ்வாறு நகர்த்துவது என்பது பற்றிய தெளிவின்மை இயக்கங்களிடையேயான முரண்பாடுகள் உள் முரண்பாடுகள் ஆயுத முனையில் முடிவடைதல் என்பன போராட்டம் முன் செல்வதற்கு தடையாகவே உள்ளன. இவற்றை நாம் ஆக்கபூர்வமான வழிகளில் தீர்த்து கடந்து செல்வதன் மூலம் மட்டுமே எமது போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல முடியும். இதில் தவறிழைப்போமாயின் எதிரிக்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குவதுடன் பிற்போக்கு சக்திகளிடம் எமது போராட்டத்தைக் கையளித்தவர்களாவோம்...........

இந்நிலையில் எமது மக்களையும், பிரதேசத்தையும், வளத்தையும் பாதுகாக்க, சகல விடுதலை இயக்கங்களையும் தேசபக்த சக்திகளையும் ஐக்கியப்படுத்தி பரந்துபட்ட ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்கி தேசிய தற்காப்பு யுத்தத்தை முன்னெடுப்பது அத்தியாவசியமாகும். இவ் ஐக்கிய முன்னணிக்கு தொழிலாள விவசாயிகளின் தலைமையைக் கொடுப்பதன் மூலமே சுதந்திரமும் சுபீட்சமும் கொண்ட தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசை வென்றெடுக்க முடியும்.

- புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்குவோம்!
- மக்கள்யுத்தப் பாதையில் முன்னேறுவோம்!

**பயணம்**

# தமிழீழ தேசிய விடுதலை முன்னணியில் இருந்து பிரிந்து சென்றதற்கான அரசியற் காரணங்கள்

இந்த ஸ்தாபனம் (PLFT - தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி) எங்கிருந்தோ புதிதாக வந்து முளைத்த ஒன்றல்ல. கடந்த கால எமது அரசியல் நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே இந்த ஸ்தாபனத்தின் உருவாக்கம் அமைந்துள்ளது. முன்னர் நாம் இயங்கிவந்த ஸ்தாபனமான தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் (NLFT) அரசியல் போக்கினுலும் சூழலின் மாற்றங்களின் விளைவாலும் இது தோன்றியதாகும். இவ்வகையில் NLFT இன் கடந்தகால நடவடிக்கைகளின் சரி, பிழை இரண்டிற்கும் நாங்களும் காரணமானவர்கள் என்ற வகையில் அது பற்றிய ஒரு சரியான ஆய்வை மேற்கொள்வதன் மூலமே இத்தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆக்கபூர்வமான பாத்திரத்தை வகிக்கமுடியும்.

கடந்தகால இடதுசாரி இயக்கங்களின் வேலைகளில் தொடர்ச்சியாகவே தமிழீழ தேசிய விடுதலை முன்னணி உருவானது. தேசிய இனப் பிரச்சினை தொடர்பான முன்னைய இடதுசாரிகளின் தவறை உணர்ந்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி உருவாக்கப்பட்டது. கடந்த கால இடதுசாரிகளின் வேலைப்பாணி தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியிலும் வெளிப்பட்டது. தாராளவாதம், இழுபட்டபோக்கு, செயல்திறனின்மை, போர்க்குணம்சம் போதாமை என்பன தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணியின் குறைபாடுகளாக விருந்தநுடன் நிகழ்ச்சிக்குப் பின்னுல் இழுபட்டுப் போகும் போக்கும் காணப்பட்டது. 1983 ஜுலைக் கலவரம் எமது ஸ்தாபனத்தையும் பாதித்தது. சரியான இயக்கமொன்றைக் கட்டியமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் வேலைமுறைகளை சுயவிமர்சனம் செய்துகொண்டு அந்த ஸ்தாபனத்தை புனரமைத்து அதன் தொடர்ச்சியாகவே தமிழீழ தேசிய விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது. (தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் தோற்றம் பற்றிய வரலாறு 'இலக்கு' இதழ் 4 இல் பார்க்க)

தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்து தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசை அமைப்பதன் மூலமே தமிழ் மக்களின் விடுதலையை உத்தரவாதம் செய்ய முடியுமென தீர்மானித்திருந்தோம். இது, போராட்டம் பாட்டாளிவர்க்கத் தலைமையில் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே சாத்தியமானதாகும். 1983 செப்டெம்பர் முதலாவது மாநாட்டில் இவை தீர்மானிக்கப்பட்டிருந்தன. (முதலாவது தேசிய மாநாட்டு அரசியல் அறிக்கை அடிப்படையில் சரியானதென இன்னமும் நம்புகிறோம்) பலவிடயங்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் முன்வைக்கப்படவில்லை. தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல மக்கள் யுத்தத்தை முன்னெடுப்பதன் மூலமே சாத்தியமாகும். மக்கள் யுத்தம் என பொதுப்படையாக குறிக்கப்பட்டிருந்ததேயொழிய எமது நாட்டின் குறிப்பான சூழலில் எப்படி மக்கள் யுத்தத்தை முன்னெடுப்பது என்பது குறிப்பிடப்படவில்லை. நகர்ப்புற கெரில்லா நடவடிக்கை ஓர் பிரதான போராட்ட வடிவம் என்பதும்

குறிப்பிடப்பட்டிருந்தது. பாட்டாளிவர்க்கத் தலைமையை எப்படி உருவாக்குவது என்பது தெளிவாக முன்வைக்கப்படவில்லை.

பாட்டாளிவர்க்கத் தலைமையை உத்தரவாதம் செய்ததன் பின்னுல்தான் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடமுடியும் என அமைப்பினுல் (NLFT) முன்வைக்கப்பட்ட கருத்து தவருனதென நாம் கருதுகிறேம். போராட்டம் முனைப்படைந்து ஏனைய வர்க்கங்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து விலகியிருந்து பாட்டாளிவர்க்கத்தை அணிதிரட்டுவது என்பது சாத்தியமற்றது. ஏனைய வர்க்கங்களால் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இப்போராட்டத்தில் பல குறைபாடுகளை காணக்கூடியதாக இருக்கின்றது. இப்போராட்டம் தேசிய விடுதலைக்குரிய சகல பரிமாணங்களையும் கொண்டிருக்க வில்லை. இந்நிலையில் இயங்கியல் ரீதியாக பார்க்குமிடத்து முற்போக்குத் தேசியவாதத்தை வளர்த்தெடுக்காமல், தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்காமல் பாட்டாளிவர்க்கத் தலைமையை உத்தரவாதம் செய்ய முடியாது. தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியையும் நிறைவுசெய்ய முடியாது. எனவே இப்போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டமாக வளர்த்தெடுத்து புதிய ஜனநாயகப் புரட்சியாக முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே எமது இலக்குகளை அடையமுடியும். பாட்டாளிவர்க்கத் தலைமையை கொண்டுவருவதற்கு அடிப்படை மக்களின் பகுதிப் போராட்டங்களை முன்னெடுப்பதும், அதனை தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உட்படுத்தியும் முன்னெடுப்பதன் மூலம்மட்டுமே சாத்தியமாகும். வெறுமனே அதீத பாட்டாளிவர்க்க கோஷங்களை வெளியிடுவதால் அல்ல. நாம் அறிக்கையிலும் எமது அரசியல் திட்டத்திலும் பல விடயங்களை தெளிவாக குறிப்பிட்டாலும் நடைமுறையில் அவற்றை சரியென உணர்த்தக்கூடிய வகையில் எமது நடைமுறைகளில் இருக்கவில்லை. தமிழீழ தேசிய விடுதலை முன்னணி பல்வேறு வர்க்க சக்திகளையும் உள்ளடக்கிய யுத்ததந்திர ரீதியான (புதிய ஜனநாயகப் புரட்சிக்கான) கீழிருந்து கட்டும் ஐக்கிய முன்னணி எனக் குறிப்பிட்டிருந்தாலும் நடைமுறையில் (NLFT) ஒரு வர்க்க ஸ்தாபனமாக பார்த்த பார்வையே இருந்தது. இவ் ஐக்கிய முன்னணியானது ஏனைய விடுதலை ஸ்தாபனங்களுடன் ஐக்கியமும் போராட்டமும் எனும் கோட்பாட்டை பின்பற்றும் என முடிவு செய்திருந்தோம். ஆனுல் இவ் அடிப்படையில் ஸ்தாபனத்தின் வேலைமுறை இருக்கவில்லை. தமிழீழப் போராட்டத்தை தேசியவாத சக்திகள் முன்னெடுக்கும்போது இது தேசியவாதிகளின் போராட்டம் வெற்றியடையாது எனக்கூறி போராட்டத்தில் ஈடுபடாது இருந்தோம். மாருக இப்போராட்டத்தில் மனப்பூர்வமாக ஈடுபட்டு எமது பங்களிப்பை நல்குவதன் மூலமே நாம் சரியான வழியில் போராட்டத்தை முன்னெடுக்க முடியும். அத்துடன் சக இயக்கங்களின் தவறுகளை சினேகபூர்வமாக சுட்டிக்காட்டுவதன் மூலம் அவர்களையும் சரியான பாதையை நோக்கி அழைத்துச்செல்ல வேண்டும். இதுவே ஐக்கியமும் போராட்டமும் என்ற கோட்பாட்டை பின்பற்றுவதாகும்.

எமது போராட்டம் ஆயுதமேந்திய போராட்டம் என நாம் கூறிக்கொண்டோம். அதற்கான ஒரு ராணுவ அமைப்பு அவசியம் எனவும் கூறிக்கொண்டோம். ஆனுல் அதற்கான நடைமுறை வேலை எதையும் முனைப்பாக கைக்கொள்ளவில்லை. எமது நாட்டுச் சூழலில் படையை எப்படிக் கட்டுவது அதற்குரிய ஸ்தாபன அமைப்பு என்ன என்பது பற்றிய தெளிவுகள் அமைப்புக்கு இருக்கவில்லை. படைகட்டலின் அவசியம் பற்றி வலியுறுத்தியவர்கள் சுத்த ராணுவவாதிகளாகக் காட்டப்பட்டனர்.

இன்று போராட்டத்தை முன்னெடுக்க ஒரு மைய ராணுவக் குழுவும் முதல ராணுவ

அமைப்புகளும் கட்டப்படல் அவசியமானது.

இன ஒடுக்குமுறை உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இந்நேரத்தில் எதிரியிடமிருந்து எம் தேசத்தை பாதுகாக்க தேசிய தற்காப்பு யுத்தத்தை முன்னெடுப்பது அவசியம் என நாம் கருதுகிறோம். தேசிய தற்காப்பு யுத்தம் என வைக்கப்படுவது தவறானது என (NLFT) கருதுகின்றது. இத் தேசிய தற்காப்பு யுத்தத்திற்கு பகுதிப் போராட்டம் உட்படுத்தப்பட வேண்டிய தன் அவசியம் மறுக்கப்பட்டது. இன்றைய பிரதான முரண்பாட்டை தீர்க்கும் போராட்டத்தை முன்னெடுப்பதன்மூலம் மட்டுமே ஏனைய முரண்பாடுகளும் தீர்வுக்கு கொண்டு வரமுடியும் என்பது மறுக்கப்பட்டது. இவ்வாறாக கருத்து வைப்பது பூர்ஷ்வா நலன் சார்ந்தது என்றும் கூறப்பட்டது. எமது நாட்டில் நகரங்களிற்கும் கிராமங்களிற்கும் இடையே பாரிய வேறுபாடின்மை, மற்றும் சிறிய பிரதேசம் என்பவை கிராமம், நகரம் இணைந்த போராட்ட முறையையேவேண்டி நிற்கின்றது. நகரப் போராட்டம் கிராமிய போராட்டத்திற்கு உதவும் வகையிலும் கிராமியப் போராட்டம் நகரப்போராட்டத்திற்கு உதவும் வகையிலும் முன்னெடுக்கப்படவேண்டும். நகர்ப்புற கெரில்லா நடவடிக்கை மக்கள் யுத்தப்பாதையில் ஓர் போராட்டவடிவமாகும்.

NLFT முதலாவது மாநாட்டு அறிக்கையில் இலங்கை ஓர் நவகாலனித்துவ நாடு எனும் கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் இன்று இலங்கை ஓர் அரைக் காலனித்துவ நாடு என NLFT இனால் கூறப்படுகின்றது. இம்மாற்றம் தகுந்த ஒரு ஸ்தாபன முறையில் செய்யப்படவில்லை. இலங்கை ஓர் நவகாலனித்துவ நாடு என்றே நாம் இன்னமும் கருதுகின்றோம்.

NLFT பல விடயங்களிற்கு சீனப் புரட்சியின் அனுபவங்களை மாதிரியாகப் பின்பற்றும் போக்கை கொண்டுள்ளது.

இவ் அரசியற் கருத்து முரண்பாடுகள் காரணமாகவும் ஸ்தாபன நடைமுறை முரண்பாடுகள் காரணமாகவும் தமிழீழ தேசிய விடுதலை முன்னணியில் இருந்து பிரிந்து தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி எனும் பெயரில் புதிய ஸ்தாபனமாக இயங்குகின்றோம் என்பதையும் அறியத்தருகின்றோம். ●

**தற்கொலையும் சமூகமும்**

*மனிதனின் இலட்சியம் நல்லதொரு வாழ்க்கையை மேற்கொள்ளுவதே; அதைவிட்டு அவனது இயற்கையான எண்ணங்களுக்கெதிராகத் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது. தற்கொலை என்பது சமுதாயத்தின் மீது கொண்ட அனைத்து நம்பிக்கைகளிலும் ஏமாற்றம் ஏற்படும் பொழுது ஏற்படுகின்ற ஒரு உந்துதல் தானே தவிர வேறல்ல எனவே சமுதாயத்தின் மீது நாம் இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற, நல்லதொரு சமுதாயம் அமைய பாடுபட வேண்டும். அப்படியான நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் போராட்டத்தில் நாம் மரணம் அடைந்துவிட்டால் கூட கவலைப்பட வேண்டியதில்லை. நமது போராட்டம் வெற்றி பெறுவதற்காக நமது மரணம் பயன்படட்டும்.*

- மாவோ -

# மீண்டும் மக்களுடன்

## கம்யூனிஸ்ட் தலைவர் ஒக்கம்போவின் பேட்டி

சற்றூர் ஒக்கம்போ பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒரு தலைசிறந்த கம்யூனிஸ்டும், பிரசித்தி பெற்ற பத்திரிகையாளரும் ஆவர். இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்படு முன் ஒன்பது ஆண்டுகளாக அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். 1985 மே 5ந் தேதி மணிலாவிலுள்ள தேசிய பத்திரிகை நிறுவனத்துக்கு செல்ல அனுமதிக்கப்பட்டபோது அவர் தப்பி ஓடினுர்.

அன்று முதல் அவரைப் பற்றித் தகவலே இல்லை. தப்பி ஓடிய பின்னர் ஒக்கம்போவை பேட்டி கண்ட முதலாவது நபர் அமெரிக்க சுதந்திர (freelance) படப் பிடிப்பு-பத்திரிகையாளர் சார்ள்ஸ் ஸ்டீனர் ஆவர். கடந்த நவம்பர் மூன்ருவது வாரத்தில் பிலிப்பைன்ஸ் பட்டணம் ஒன்றில் மேற்படி நிருபருக்கு ஒக்கம்போ பேட்டி அளித்தார். அவர் பேட்டியின் சில பகுதிகள் பின்வருமாறு:-

*புரட்சி இயக்கத்தின் இன்றைய நிலைமை யாது? அதன் உடனடிக் குறிக்கோள்கள் யாவை?*

நான் நலமே இருக்கிறேன் என்பதை எல்லோருக்கும் தெரிவிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் ஆகும். 1976ல் நான் கைது செய்யப்பட்டது முதல் புரட்சி இயக்கத்தில் மகிழ்ச்சிகரமான மாபெரும் மாற்றங்கள் பல ஏற்பட்டுள்ளன. நான் இன்னும் எனது பாதையை தடவித்திரிகின்ற போதிலும், நான் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிலிப்பைன்ஸ் மக்களுடன் இருக்கிறேன்.

இன்றைய கட்டத்தில் இடதுசாரிப் புரட்சி இயக்கம் யுத்ததந்திர தற்காப்பின் ஒரு முன்னேறிய கட்டத்தில் இருப்பது பகிரங்கப்படுத்தப் பட்டுள்ளது என நான் எண்ணுகிறேன். (யுத்த தந்திர தற்காப்பிலிருந்து யுத்ததந்திர சமநிலைக்கும், யுத்ததந்திர சமநிலையிலிருந்து யுத்ததந்திர எதிர்த் தாக்குதலுக்கும் செல்லும் இயக்கத்தின் ஒரு கட்டம் இது.) புரட்சியில் குறிப்பிட்ட இக் கட்டங்களை அடைவதற்கு புரட்சிகரத் தலைமையானது தீர்க்கமான ஒரு கால அட்டவணையை முன்வைக்கவில்லை. இடதுசாரி ஆயுதப்படைகள் அரசாங்கத்தை விரைவில் கைப்பற்றக்கூடிய அபாயம் இருப்பதாக அமெரிக்க அரசாங்கமும் ஜனதிபதி மார்க்கோஸும் கூறி, கவலையடைந்துள்ளனர்... அவர்கள் வேறுவேறு புள்ளிவிபரங்களை வெளியிடுகின்றனர். 15,000 (கம்யூனிஸப் படைகள்) என்பது ஏற்கனவே ஒரு கவலைக்குரிய தொகை என்று அமெரிக்கா கூறுகிறது.

எந்தப் புள்ளிவிபரம் சரி என்று சொல்லும் நிலையில் நான் இல்லை. தந்திரோபாய ரீதியில் புரட்சி இயக்கத்தின் தலைமை அரசாங்கத்தினதும் அமெரிக்காவினதும் முரண்பட்ட புள்ளி விபரங்களை தீர்க்காது அப்படியே விட்டுவிடும் என்பது எனது கருத்து. இந்த நிலையில் முக்கியத்துவம் வாய்ந்தது

என்னவென்றால், பிலிப்பைன்ஸ் மக்களின் அரசியல் மனோபாவத்தில் ஒரு மாபெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது; எண்ணற்ற இளைஞர்களும், யுவதிகளும் புதிய மக்கள் படையில் சேர்வதற்கு வந்தவண்ணம் உள்ளனர்; ஆனால் படையில் சேர விரும்புவோரைச் சேர்ப்பதற்கு போதுமான யுத்ததளபாடங்கள், கருவிகள் கூட மக்கள் படையிடம் இல்லை.

*வெளியிலிருந்து, வேறு நாடுகளிடமிருந்து உதவி பெறுமல், புரட்சி இயக்கத்தை விரிவாக்கக்கூடிய வழி ஏதும் உண்டா?*

1980 முதல் புதிய மக்கள் படையின் ஆளணியிலும் ஆயுத பலத்திலும் மிகவும் துரிதமான வளர்ச்சி காணப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட ஆயுதங்களில் பெரும்பாலானவை பிரதானமாக பிலிப்பைன்ஸ் ஆயுதப் படைகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகள் மூலமே பெறப்பட்டன. அதாவது உள்நாட்டு வளங்களிலிருந்தே சேகரிக்கப்பட்டன. இது தொடர்ந்து நடைபெற்று அடுத்த சில ஆண்டுகளில் மேலும் தீவிரமடையும். வெளிநாட்டு மூலங்களிலிருந்து ஆயுதங்கள் பெறுவது அவசியமா, இல்லையா என்பது புதிய மக்கள் படைக்கு எதிராக பிலிப்பைன்ஸ் ஆயுதப்படைகள் உபயோகிக்கும் ஆயுதங்களின் தரத்தைப் பொறுத்ததாகும்.

புதிய மக்கள் படை அல்லது பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி, பிரதான போராட்ட வடிவம் ஆயுதப் போராட்டம் என்று கூறும் அதே சமயம், அரசியல் வழிகள் மூலம் அதன் இலட்சியங்களை அடையும் சாத்தியப்பாட்டையும் விட்டுவிடவில்லை. ஆயுதம் தாங்கிய, ஆயுதம் தாங்காத மக்கள் சக்திகள் சாத்தியமான அளவு இரத்தம் சிந்தாமல் மார்க்கோஸ் சர்வாதிகாரத்தை தூக்கியெறியக்கூடிய ஒரு தார்மீக பலத்துடன் மக்கள் மத்தியில் மிகப் பலம் வாய்ந்த ஆயுதமற்ற இயக்கம் ஒன்றை வளர்க்கும் சாத்தியப்பாட்டை இன்று நாம் கூடுதலாக எதிர்பார்க்கிறோம்.

*மார்க்கோஸ் அரசாங்கத்தை தூக்கியெறிவதை ஒரு லட்சியமாக கூறுகிறீர்கள். ஆனால் அதன் இடத்தில் மிதமான எதிர்ப்பைக் காண நீங்கள் விரும்புகிறீர்களா?*

மார்க்கோஸ் சர்வாதிகாரம் மக்களுக்கு எதிராக ஏமாற்றையும் ஆயுதப்படைகளையும் தொடர்ந்து உபயோகிக்கும் என்பதை நான் முற்றாக மறுப்பதற்கில்லை. அது புரட்சிச் சுவாலையை கொழுந்துவிட்டு எரியச் செய்வதோடு, புதிய மக்கள் படையும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆளணிகளைச் சேர்ப்பதற்கு செழிப்பான வளத்தையும் வழங்கும். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது புதிய மக்கள் படையோ அதன் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் மார்க்கோஸ் சர்வாதிகாரம் தொடர்ந்திருப்பதில் தங்கியுள்ளது எனச் சொல்வது சரியல்ல. இன்றைய நிலையில் புரட்சித் தலைமை காலாகாலத்துடன் அதன் தற்காப்பு ஆற்றலை வளர்க்கவும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவும் பொதுமக்களை போதுமானளவு தட்டியெழுப்புவதிலும் கூடுதலான அக்கறை செலுத்துகிறது. ஆனால் அது மார்க்கோஸ் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதை நாம் விரும்புகிறோம் என்று அர்த்தமாகாது. இதனால் தான் மார்க்கோஸ் சர்வாதிகாரம் இயன்றளவு விரைவில் ஒழிவதைக் காண ஆசைப்படுகிறோம்.

*அவருக்குப் பதில் கொறஸோன் அக்குவினோ ஜனாதிபதி ஆவதை விரும்புகிறீர்களா?*

இன்று பிரச்சினை என்னவென்றால், கூறப்படும் ஜனநாயக எதிரணி அல்லது

சட்ட ரீதியான எதிரணியானது, பிலிப் பைன்ஸ் சமுதாயத்தை வாட்டி வதைக் கும் உண்மையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய ஒரு பொது வேலைத்திட் டத்தின் அடிப்படையில் உடன்பாடு காண முடியாத அளவுக்கு குழப்பத்தில் மூழ்கியி ருக்கிறது. புரட்சித் தலைமை எதிரணியில் பழைய பாரம்பரிய அரசியல் நிறமாலையிலி ருந்து வேறுபட்ட ஒரு புதிய ரக அரசியல் தலைமை தோன்றுவதைக் காண விரும்பு கிறது... தேர்தல் சம்பந்தப்பட்ட வரையில், மார்க்கோஸ் சர்வாதிகாரத்தின் கீழ் பாரம் பரிய அரசியல்வாதிகளால் ஏற்கனவே அங் கீகரிக்கப்பட்ட தேர்தல்கள் மூலம் பூரண மான ஒரு மாற்றத்தை அல்லது சீர்திருத்தங் களை கொண்டுவர முடியும் என நாம் நம்ப வில்லை... புதிய மக்கள் படையும், கம்யூ னிஸ்ட் கட்சியும், தேசிய ஜனநாயக முன் னணியும் கூட, வெறும் ஆட்களை மட்டும் மாற்றும் இதுபோன்ற சதியை விட, ஒரு சில அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய அரசாங்கத்துக்கு வழிகோலும் தேர் தலில் மாத்திரம் பங்குபற்ற ஆசைப்படுகின் றன.

*பெப்ரவரியில் ஒரு தேர்தலுக்கான பிரகடனம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?*

எதிரணி இதைப் பாராதூரமாக எடுத் துள்ள போதிலும், இது ஒரு கேலிக் கூத் தாகி வருவது போலத் தோன்றுகின்றது. மார்க்கோஸ் இதுபற்றி உண்மையில் விசு வாசமுடையவராகவோ அல்லது இதற்கு முற்று முழுதாக தயார் செய்பவராகவோ தோன்றவில்லை. பதிலுக்கு ஒரு திடீர்த் தேர்தலை நடத்துமாறு அமெரிக்க அரசாங் கத்தாலும் உள்நாட்டு எதிரணியாலும் நிர்ப் பந்திக்கப்படுகிறார் போலும்! தேர்தலுக் கான நிலைமைகளில் அல்லது கட்டுக்கோப் பில் அவர் மோசடி செய்ய முயல்வதைப் பார்த்தால், அது நையாண்டிக்குரிய ஒன் றாகி வருகின்றது.

*அடுத்த சில ஆண்டுகளில் நிலைமை எவ்வாறு இருக்கும் என நீங்கள் ஊகிக்கிறீர்கள் ?*

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அரசி யல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் நிலைமை நிலையற்றதாகவே இருக்கும் என எதிர்பார்க்கிறோம். அடுத்த ஐந்து ஆண்டு களில் உருப்படியான பொருளாதார மீட்சி எதுவும் ஏற்படாது என பொருளாதார நிபு ணர் மத்தியிலும் பொது உடன்பாடு நிலவு வதாக நான் நினைக்கிறேன். இத்தகைய நிலைமையில் மக்கள் மத்தியில்-தொழிலாளர், விவசாயிகள், மத்தியதர வர்க்கத்தில்கூட புரட்சிகர எழுச்சி வற்றி வரண்டுவிடும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. மார்க் கோஸ் சர்வாதிகாரம் பொருளாதாரத்தில் ஒரு மீட்சியை ஏற்படுத்துவது, அதன் மீதான நம்பிக்கையை மீட்பது இரண்டை யும் ஏற்படுத்த முடியாதளவுக்கு பெரும் பிரச்சினையில் சிக்கியுள்ளது என நாம் எண்ணுகிறோம். அடுத்த மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் புரட்சி இயக்கத்தில் ஒரு மாபெரும் வளர்ச்சியை நாம் எதிர்பார்க் கிறோம்.

*ஏதும் நடவடிக்கைகள் எடுக்குமாறு மார்க்கோஸ் மீது பெரும் நிர்ப்பந்தத்தை திணிப்பது போலத் தோன்றும் வாஷிங்டன் பிரகடனங்கள் பற்றி தங்கள் கருத்து யாது? இது உண்மையான வேறுபாடுகளை குறிக்கின்றதா?*

ஜனாதிபதி ரீகன் நிர்வாகத்தின்கீழ் அமெரிக்கா ஒரு விஷயத்தைத் தவிர, அமெ ரிக்கா உலக வல்லரசாக, அல்லது கற்பனை செய்யப்படும் சர்வதேச கம்யூனிஸ்ட்

எதிர்ப்பு இயக்கத்தில் அல்லது சோவியத் எதிர்ப்பு போராட்டத்தில் அது தலைவனாக இருப்பது என்ற அடிப்படைப் பிரச்சினையைத் தவிர, அதன் வெளிநாட்டுக் கொள்கையில் தான் விரும்பியதைக் கூறுவதில் நிதானமற்றதுபோல் தோன்றுகிறது. வளர்ந்து வரும் இந்த வலதுசாரிப்போக்கு-ரீகன் நிர்வாகத்தின் சாராம்சமான வலதுசாரிப் போக்கு மட்டுமல்ல, அமெரிக்காவிலுள்ள சில வலதுசாரிப் பிரகிருதிகள் கூட-அமெரிக்கா ஏதும் செய்யாவிட்டால், பிலிப்பைன்ஸ் நிலைமை ஈரான் அல்லது நிக்கரகுவா நிலைமையைப்போல் மாறிவிடும் என்ற அச்சத்தை தோற்றுவிப்பதாக நான் எண்ணுகிறேன்.

தாராளவாத எதிரணியில் உள்ளவர்கள் கூட மார்க்கோஸ் அரசுக்கு ஆதரவு அளிக்கும் விஷயத்தில் ரீகன் நிர்வாகத்துடன் ஒத்துப்போகாத அதேசமயம், அமெரிக்க நலன்களைப் பாதுகாக்க நேரடித் தலையீடு உட்பட, ஏதேனும் செய்யவேண்டும் என்பதில் நிர்வாகத்துடன் ஓரணியில் நிற்கின்றனர்.

*ரீகன் நிர்வாகம் மார்க்கோஸ் மீது பகிரங்க நிர்ப்பந்தங்கள் கொண்டு வரும் நோக்கம் என்ன?*

அவர்கள் கருத்தின் பிரகாரம், மார்க்கோஸ் எவ்வளவு குழப்பமான, இரண்டும் கெட்டான் நிலையிலிருந்தபோதிலும், அவர் ஆயுதப் படைகளையும் அரசு யந்திரத்தையும் தனது கட்டுப்பாட்டில் இன்னும் வைத்திருக்கிறார் என நம்புகிறார்கள். அவர்களுக்கு உடனடியான மாற்றுவழி ஒன்றும் தென்படவில்லை. ஆகவே அவர்கள் மார்க்கோஸை வைத்து ஒரு சூதாட்டத்தை நடத்தவும் தயாராயுள்ளனர். ஆனால் எதிரணி வேட்பாளர் ஒருவரால் மக்களின் தேவைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியுமா என்பதைப் பொருட்படுத்தாது, அவர் ஜனரஞ்சகமான ஆதரவைப் பெறுவாரா என்ற சாத்தியப்பாட்டையும் பார்க்கின்றனர். அமெரிக்கா அதன் ஆதரவை மாற்றக்கூடும். ஆனால் அமெரிக்கத் தளங்களையும் முதலீடுகளையும் பாதுகாப்பதற்காக, அவர்கள் எத்தகைய அரசாங்கத்தை ஆதரிப்பர் என்று நாம் இன்னும் இனம்காண முடியாதிருக்கிறது.

ஆகவே நமது கருத்தில், முன்வைக்கப்படும் மாற்று வழிகளில் நாம் நம்பிக்கை வைக்கவில்லை. பதிலுக்கு பெரும்பான்மையான மக்களை - வெகுஜனஸ்தாபனங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் தொழிலாளர், விவசாயிகளை குறிப்பிடத்தக்களவு பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு வகையான அரசியல் கூட்டையே நாம் பார்க்கிறோம்.

*புதிய மக்கள் படைக்கு நிதிகள் பெறும் பிரச்சினைக்கு மீள்வோம். வர்த்தக முயற்சிகளுக்கு வரி விதிக்கும் முறை இன்று பணம் பெறுவதற்கான பிரதான மூலமாக இருக்கின்றதா?*

கோட்பாட்டு ரீதியில், புரட்சி இயக்கம் பிரதானமாக மக்கள் ஆதரவிலிருந்து அதன் தேவைகளுக்கான நிதிகளைப் பெறுவதில் நம்பிக்கையுடையது. ஆனால் பிலிப்பைன்ஸில் இன்றுள்ள பொருளாதார நிலைமையில், புரட்சிப் போராட்டத்துக்கு எவ்வளவு பெரிய வெகுஜன ஆதரவு இருந்தபோதிலும், புரட்சிப் போராட்டத்தை நடத்துவதற்கான செலவினங்கள் அதிகரித்து வரும் போது, அதற்கான பணத் தேவை முழுவதையும் பொது மக்களிடமிருந்து பெற இயலாது. ஆகவே நாட்டின் பல்வேறு வழிவகைகளை வகுத்துள்ளது. அவற்றில் புரட்சிகர வரி விதிப்பு என்று நாம் கூறும் ஒன்றும் உள்ளது. அடிப்படைக் கருத்து என்னவென்றால், நாட்டின் இயற்கை வளங்களையும், மனித வளங்களையும் சுரண்டுகின்ற பெரிய உள்நாட்டு, வெளிநாட்டு கூட்டுத்

தாபனங்கள் மீது சில வரிகளை விதிப்பதாகும். அப்படி வரி விதிப்பது என்றுல் அவை பெற்ற லாபத்தில் ஒரு பகுதியை மக்களின் தேவைக்காக சுவீகரிப்பதாகும். இந்த கொள்கை பூரணமாக ஸ்தாபிக்கப்பட்டு விட்டதா? எல்லா பிரதேசங்களிலும் இது சமமாக நடத்தப்படுகிறதா? என்று என்ஞல் கூற இயலாது. ஆனுல் மக்களின் வாழ்க்கையை பெரிதும் பாதிக்கும் கூட்டுத் தாபனங்கள் மீது - சுரங்கப் பிரதேசங்கள், காட்டு மரங்கள் வெட்டும் பகுதிகள் அல்லது மின்டனுவோவிலுள்ள பெரும் தோட்டங்கள் போன்றவை மீது வரி விதிப்பது பொதுவான கோட்பாடாகும்.

*வடக்கு லு ஸோன் போல, ஒரு பிரதேசத்தின் சூழல் முழுவதையும் சிதைக்கும் மரம் வெட்டும் நடவடிக்கையை முற்றுக நிறுத்தி விடுவது நன்றல்லவா?*

புதிய மக்கள் படை அதை விரும்பும் என நான் எண்ணுகிறேன். இது அவர்கள் வனப் போர்வையை இழப்பதற்கு காரணமான ஒரு விஷயமாகும். இன்னும் அடிப்படையானது என்னவென்றுல், தொடர்ச்சியாக மரங்களை வெட்டுவதால் காடுகள் அழிந்து, சூழலும் தாழ் பிரதேச விவசாயிகளும் பாதிக்கப்படுகிறுர்கள். புரட்சி இயக்கங்கள் விரும்பினுல் அவற்றை முற்றுக நிறுத்தி விடலாம். ஆனுல் அவர்கள் மார்க்கோஸ் அரசின் உத்தரவு-ஒத்தாசையுடன் செயல்படுவதால், அவர்கள் எவ்வளவு செலுத்த முடியுமோ, அவ்வளவு வரியை புரட்சி இயக்கம் விதிக்கின்றது.

*முதலீடு செய்துள்ளதோடு நிதியுதவியும் அளிக்கும் யப்பான், மேற்கு ஜெர்மனி போன்ற இதர நாடுகள் மார்க்கோஸ் ஆட்சிக்கு வழங்கும் ஆதரவை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? அவற்றின் பாத்திரத்தை அமெரிக்காவின் பாத்திரம் போல் கருதுகிறீர்களா?*

அமெரிக்க முதலீடுகள் போல் பிலிப்பைன்ஸின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் அளவுக்கு அந்த நாடுகளின் முதலீடுகள் வியாபித்திருக்கவில்லை. புரட்சி இயக்கம் சாராம்சத்தில் அந்நிய முதலீடுகளுக்கு எதிரானதல்ல. ஆனுல் நீண்ட காலப் போக்கில் பிலிப்பைன்ஸின் பொருளாதார அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிக்கும் முதலீடுகளை அது எதிர்க்கின்றது. இன்றைய நிலைமையில் இந்த நாடுகளிடமிருந்து கடன்களாகவும், முதலீடுகளாகவும் கிடைத்துவரும் ஆதரவு மார்க்கோஸ் சர்வாதிகாரத்துக்கு முண்டு கொடுப்பது போல் இருப்பதால், இத்தகைய ஆதாவு தொடரக் கூடாது என்று புரட்சி இயக்கம் எச்சரிக்கின்றது. ஆனுல், அது மேலும் முதலீடுகளை வரவேற்கும் சாத்தியப்பாட்டை விலக்கவில்லை.

*பிலிப்பைன்ஸின் இன்றைய நிலைமைக்கும் வியட்நாம், நிக்கரகுவா நிலைமைகளுக்கும் இடையில் சமாந்தரங்களைக் காண்போருடன் நீங்கள் ஒத்துப் போகிறீர்களா?*

நீங்கள் குறிப்பிடும் நாடுகளின் நிலைமைகளில் ஒரு குறிப்பிட்ட அளவு ஒரே மாதிரியான இயல்புகள் இருப்பது உண்மை தான். அவற்றின் பொதுத்தன்மை பொருளாதார நிலைமை ஆகும். பிலிப்பைன்ஸும், நிக்கரகுவாவும் அபிவிருத்தியில் ஏறக்குறைய ஒரே மட்டத்தில் உள்ளன. குறிப்பிடத்தக்க இன்னெரு அம்சம் என்னவென்றுல், இந்த நாடுகளின் அரசியல் வாழ்வையும் பொருளாதாரத்தையும் நிர்வகிப்பதில் காணும்

அமெரிக்காவின் வியாபகமான பாத்திரமாகும். நவீன ஆயுதங்களையும் அமெரிக்கத் துருப்புகளையும் உண்மையில் கொண்டு வந்து அமெரிக்கா நேரடியாக செயல்படத் தொடங்கினுல், வியட்நாமில் அல்லது நிக்கரகுவாவில் நடந்தது பெருமளவில் இங்கும் நடைபெறலாம் என நான் எண்ணுகிறேன்.

*அரசாங்க மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவது என்ற வகையில், வரலாற்றுப் போக்கை நீங்கள் செய்யவேண்டும் என்று மார்க்ஸ் குறிப்பிட்டது போல, நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்துக்கு ஊடாகச் செல்லாமல் சோஷலிஸத்துக்கு மாற முடியுமா?*

நாட்டுப்புறத்தில் நிலப்பிரபுத்துவ முறைகள் இன்னும் மேலோங்கியுள்ளன. அடுத்து மூலதனமும் ஊடுருவியுள்ளது. இன்னும் நகர மையங்களிலும் விவசாயத் துறையிலும் ஓரளவுக்கு முதலாளித்துவம் வளர்ச்சியடைந்துள்ளது. புரட்சிப் போராட்டத்தின் வேலைத் திட்டம் இரண்டையும் தாக்கி, பிரபுத்துவத்தை முற்ருக ஒழித்துக்கட்டி, நிலவுடைமை முறையை ஜனநாயகமயப்படுத்தி, சமுதாயத்திலுள்ள ஏனையோரைப் போல, விவசாயிகளுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்குகின்றது... முன்கூட்டியே நோக்கி, விருத்தி செய்யப்படுவது பிலிப்பைன்ஸின் வர்த்தக முயற்சியாற்றலை இன்னும் வளர்க்கக்கூடிய ஒரு வகையான சமுதாய, பொருளாதார அமைப்பின் தோற்றமாகும். இது தோன்றி, இன்று பொருளாதாரத்தைப் பிணித்துள்ள அந்நிய நலன்களின் ஆதிக்கத்துக்கு மேலாக வளர்ந்து, பிலிப்பைன்ஸ் மக்களின் திறமைகளையும் சிருஷ்டியாற்றலையும் பலத்தையும் கட்டவிழ்த்து விடட்டும்.

சோவியத் யூனியன், சீனு, வியட்நாம் குறிப்பாக நிக்கரகுவா ஆகியவற்றின் வளர்ச்சியிலிருந்து கற்றுக்கொள்வதற்கு போதுமான அனுபவம் உண்டு. இவ்வாறு கற்று, இன்று நிலவுகின்ற பொருளாதார, அரசியல் அமைப்பின் நிலைமையை கணக்கில் எடுத்து, நமது தேவைகளுக்கு இசைவாக பிலிப்பைன்ஸ் சமுதாயம், பொருளாதாரம், அதன் அரசியல் அமைப்புகள் ஆகியவற்றின் வளர்ச்சியை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

*நீங்கள் குறிப்பிட்ட சோஷலிஸ நாடுகளில் எந்த நாட்டிலிருந்து சாதகமான முறையில் கூடுதலான படிப்பினைகளைப் பெற முடியும்?*

நமது கண்ணேட்டத்தின் பிரகாரம், சாதகமான, பாதகமான அனுபவங்கள் இரண்டிலுமிருந்து நாம் கற்றுக்கொள்கிருேம். இதுதான் புரட்சிப் போராட்டத்தில் பிந்தி வந்தவர்களுக்கு உள்ள அதிஷ்டமாகும். நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முந்திய அனுபவங்கள் ஏராளமாக உண்டு. சோவியத் யூனியனு, அல்லது சீனுவா, அல்லது சோஷலிஸ நாடுகளில் எது இன்று மிகச் சிறந்த ஆதர்சமாக உள்ளது என்று நான் சொல்லத் தயாராக இல்லை. அமெரிக்க தலையீடு ஏற்பட்டிராவிட்டால் நிக்கரகுவா எவ்வாறு வளர்ச்சியடைந்திருக்கும் என்பதை உண்மையாக பார்க்கும்போது, பிலிப்பைன்ஸ் பிரதி செய்யக்கூடிய ஒரு வகையான சமுதாய, பொருளாதார அமைப்பின் தோற்றத்தை நாம் கண்டிருக்க முடியும். ஆனுல் நேரடித் தலையீடானது சன்டனிஸ்டா அரசு இன்று அதன் தேசிய பாதுகாப்புக்கு முதலிடம் கொடுக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

நன்றி:

[ March, 1 - 1986 Lanka Guardian ]

# அரசியற் குறிப்புகள்

## 1. இப்போதைய வெகுஜன வேலையின் அத்திவாரம் என்ன?

சிங்கள ஆளும் வர்க்கத்தால் தமிழ் மக்கள் மீது நீண்டகாலமாக ஒடுக்குமுறை பிரயோகிக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் இவ் ஒடுக்குமுறைக் கெதிராக தமிழ் மக்கள் தனித்தனியாக முகம் கொடுக்க முயற்சித்தனர். அரசியல் கட்சிகளை உருவாக்கி பேரம் பேசிப் பார்த்தனர். இடையிடையே சாத்வீகமான முறையில் சட்டத்திற்குட்பட்டும் சட்டத்தை மீறியும் வெகுஜனப் போராட்டத்தை நிகழ்த்திப் பார்த்தனர். ஆனால், கபடத்தனமான சிங்கள ஆளும் வர்க்கத்தால், அவர்களது ஏமாற்றுகள், மோசடிகள், குண்டர்படை நடவடிக்கைகள், சில வேளைகளில் அரசின் ஆயுதப் படைகள் என்பவற்றால் இவை முறியடிக்கப்பட்டு வந்துள்ளன.

தமிழ் மக்களின் சாத்வீக ரீதியான போராட்டங்களின் தோல்வி, அவர்களது புதிய சந்ததியினரால் - இளைஞர்களால் கசப்புடன் பார்க்கப்பட்டது. தமது தாய் தந்தையரின் தவறை நீக்கி, ஆயுதம் ஏந்தி போரிட எத்தனித்தனர். சரியான தலைமையோ கொள்கைத்திட்டங்களோ இல்லாத போதும் தன்னை அழிக்க வருபவனை அழிக்க முடியாவிட்டாலும் தடுத்தாவது நிறுத்து என்ற சாதாரண உண்மை நிலைக்கு ஏற்ப அவர்கள் போராட ஆரம்பித்தனர். இதுவே தமிழ்மக்கள் அகிம்சாவாதத்தில் இருந்து ஆயுதப் போராட்டத்திற்கு மாறிய சுருக்கமான வரலாறு.

தமிழ்மக்கள் அடக்கு முறைக் கெதிராக தலை நிமிர்ந்து போராடுவதைக் கண்டு சகிக்க முடியாத சிங்கள பேரின வாத அரசு முழு அளவிலான ஆக்கிரமிப்பு யுத்தமொன்றை தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது இந்த ஆக்கிரமிப்பு யுத்தம், தற்காப்பு யுத்தத்தால் எதிர்கொள்ளப்பட வேண்டும். இதுவே தர்க்க ரீதியான உண்மையும் இன்றைய தேவையும் ஆகும்.

ஆனால் யதார்த்த நிலைதான் என்ன?

நீண்ட காலமாக பாராளுமன்ற வாத அரசியல், வெகுஜன நடவடிக்கைகளுக்குட் பட்டுப் போன எமது மக்கள், தற்காப்பு ஆயுதப் போராட்டத்தில் இருந்து வெகு தூரம் விலகியே நிற்கின்றனர். இந்த இடைவெளிக்கான பிரதான தவறு விடுதலை இயக்கங்களின் பக்கமே உள்ளது. விடுதலை இயக்கங்கள் மக்களிடம் மறைவிடம் மற்றும் பொருளாதார உதவிகளை கோருகின்றனர். சில சந்தர்ப்பங்களில் இயக்கங்கள் ஒழுங்கு செய்யும் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்களில் பங்கு பற்றுகின்றனர். ஆனல் இவை மட்டும் வெகு ஜன நடவடிக்கைகளோ அன்றி வெகு ஜன யுத்தத்தில் பங்கு பற்றுவதோ ஆகிவிடாது.

எதிரியால் தாக்கப்படுகின்ற நாம், அவனது அரசியல் பொருளாதார, இராணுவ வலிமைகளின் முன்னால் பலவீனர்களாகவே உள்ளோம். அதாவது நாம் தற்காப்பு நிலையிலேயே உள்ளோம். ஆகவே இந்த தற்காப்பு நிலையை நாம் புரிந்து கொண்டால் தான் மக்களை எத்தகைய வெகுஜனப் போராட்டங்களில் அணிதிரட்ட வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

எதிரி விடுதலை இயக்கங்களை, அவர்களது மறைவிடங்களைத் தேடிப்போய் தனித் தனியாக அழித்த காலம் போய்விட்டது. போராளிகள் மக்களால் ஆதரிக்கப்படுகின்ற நிலை வந்ததும் மக்களை அழிப்பதன் மூலமே போராளிகளையும் ஒழித்துக்கட்ட முடியும் என்ற நிலையை எதிரி அடைந்துள்ளான். இன்றைய சர்வதேச, தேசிய சூழலில் முழு மக்களையும் துப்பாக்கி முனையில் ஒழித்துக் கட்டுவது எதிரியால் முடியாத காரியம். எனவே அவர்களது ஆதார வாழ்நிலையை இல்லா தொழிப்பதன் மூலம் மக்களை நெருக் கடிக்குள் தள்ளி, மக்களுக்கும் விடுதலை இயக்கங்களுக்கும் இடையில் மேலும் ஐக்கியம் வளராமல் செய்வதே எதிரியின் இன்றைய தந்திரோபயமாகும்.

எனவே தான் எமது வெகுஜன வேலையின் பிரதான அம்சமாக இப்போதைய தற்காப்பு யுத்தத்தின் அரசியல் தன்மையை மக்களுக்கு புரிய வைக்க வேண்டும். வலைப் பின்னல் போன்ற அரசியல் வேலைக்கான கேந்திரங்கள் உருவாக்கப்பட வேண்டும். தற்போதைய நிலையில் எமது தாயகத்தின் பொருளாதாரத்தை அழிப்பதில் எதிரி கொண்டுள்ள ஆர்வம் என்ன நோக்கத்திலானது என்பதை நாமும் புரிந்துகொண்டு மக்களுக்கும் புரியவைப்பதன் மூலம் நீண்ட காலப் போராட்டத்தில் அவர்கள் உற்பத்தி துறையில் வகிக்கக் கூடிய பெரும் வெகுஜனப் பேரெழுச்சியில் அவர்களைத் தட்டி எழுப்பவும் ஒன்றிணைக்கவும் வேண்டும்.

மக்களின் வாழ்நிலையை எதிரி அழிக்க முற்படும்போது, மக்கள் வாழ்வதற்காகப் போராட முன்வருவது இயல்பானது. இந்த நிலையானது தற்காப்பு யுத்தத்தில் போரிடும் முனைக்கு பலமான அத்திவாரத்தை வழங்குவதில் மக்களின் நேரடியான பங்களிப்பை அதிகரிக்கவும், போர்முனைக்காக தமது போராளிகளை அனுப்பும் அரசியல் உணர்வையும் அறிவையும் வளர்க்கவும் மக்களுக்கு உதவும்.

இத்தகைய ஒரு வெகுஜன இயக்கம் இன்று எம்மால் உருவாக்கப்படவேண்டும். புறத்தோற்றங்களை உலகிற்கு அளிக்கும் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் கண்டனத் தந்திகள், மகஜர்கள் என்பவற்றையும் நாம் புறக்கணிக்கக்கூடாது. இவை எமதும் எதிரியினதும் நிலையை உலகிற்கு காட்ட வல்லன. ஆனால் மக்கள் புதிய யுத்த சூழ்நிலைக்கேற்ப உற்பத்தி செய்து வாழவும், அந்த வாழ்வை உத்தரவாதம் செய்ய போராடவும் வழி காட்டக் கூடிய வெகுஜன வேலையே எமது பூமியினதும் மக்களினதும் விடுதலைக்கான போராட்டத்தில் எமது வெகுஜன வேலைக் கானதற்போதைய மார்க்கமாகும்.

## 2. தொண்டமான் ஒரு வரலாற்று வீரனும்!

அண்மையில் நாடற்றவர் என்ற நிலையில் இருந்த 94,000 மலையக மக்களுக்கு இலங்கை அரசு குடியுரிமை வழங்குவதாகத் தீர்மானித்து அதற்கான சட்டமூலமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது பற்றி அனைவரும் அறிந்திருப்பர். சில முதலாளித்துவப் பத்திரிகைகள் 'தொண்டமானின் பிரார்த்தனை இயக்கம்' தான் அரசை இப்படியான முடிவிற்கு வர நிர்ப்பந்தம் செய்தது என்று கூறியதுடன் தொண்டமானை ஒரு வரலாற்று வீரனாகவும் புகழ் மாலை சூட்டின. உண்மையில் தொண்டமானிற்கு இவ்வளவு வலிமை இருக்குமெனில் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு ஆரம்ப காலம் தொட்டே போராடியிருப்பர். 1948ம் ஆண்டு மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோது ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் ஹர்த்தாலுடன் தனது போராட்டத்தை நிறுத்திக் கொண்ட தொண்டமானை வரலாறு அறியும்.

1948ம் ஆண்டு குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட பின் 1949ம் ஆண்டு இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்

டம் கொண்டுவரப்பட்டு இச்சட்டத்தின் கீழ் விண்ணப்பித்த 8 லட்சம் பேரில் 1,34,320 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டது. ஏனையோரைப் பற்றிய திட்டவட்டமான முடிவின்றி விடப்பட்டு பின்னர் 1954ம் ஆண்டு நேரு-கொத்தலாவலை ஒப்பந்தம் செய்யப்பட்டு அதுவும் முழுமையாக பிரச்சினையைத் தீர்க்கவில்லை. இவ்வொப்பந்தத்தினடிப்படையில் 54,000 தோட்டத் தொழிலாளர் இந்தியப் பிரஜா உரிமை பெற்று இந்தியாவிற்குச் சென்றுர்கள். இந்திய-பாகிஸ்தானிய சட்டத்தின் கீழ் இலங்கை குடியுரிமை வழங்கல் 1963 உடன் பூர்த்தியானது. நாடற்றவர் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருந்ததனுல் 1964 இல் அன்றைய இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமர் சாஸ்திரியும் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தத்திற்கு வந்தனர். அப்போதுகூட தொண்டமானே வேறு எந்த அரசியல் ஸ்தாபனமோ சரியான வகையில் போராட்டம் நடத்திவில்லை. இரண்டு நாட்டு பிரதமர்களும் அம்மக்களின் விருப்பம் எதனையும் கணக்கில் கொள்ளாமல் மந்தைகளை பறிமாற்றம் செய்வது போல் பறிமாற்றம் செய்தனர். ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தினடிப்படையில் 5,25000 பேர் அவர்களுடைய இயற்கைப் பெருக்கத்துடன் இந்தியாவிற்கு திரும்பியனுப்பப்பட வேண்டும் எனவும் 3,00000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. எனவே (1964 இல்) குடியுரிமையற்றவர் தொகை 75,000 எனக் கணக்கிடப்பட்டது. எஞ்சிய 15,0000 பேருக்கும் ஓர் ஒப்பந்தம் ஸ்ரீமா - இந்திராவால் நிறைவேற்றப்பட்டு 75,000 பேர் இந்தியாவிற்கு அனுப்பப்படுவதாகவும் 75,000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. மொத்தமாக 6,00000 பேர் இந்தியாவிற்கு செல்லவேண்டும். 3,75000 பேருக்கு இலங்கை குடியுரிமை கிடைத்தல் 1964 அக்டோபர் 30க்கு பின் பிறந்த குழந்தைகள் பெற்றோர்களைப் பின் பற்றி இலங்கை குடியுரிமையோ அல்லது இந்தியக் குடியுரிமையோ பெறுவார்கள்.

1968 மே மாதம் இலங்கை - இந்திய குடியுரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. வரையறுக்கப்பட்ட இருவருட கால எல்லைக்குள் இலங்கை பிரஜா உரிமை கோரும் விண்ணப்பங்கள் மிதமிஞ்சி மேலதிகமாகவும் இந்திய பிரஜா உரிமை கோரும் விண்ணப்பம் பற்றுக்குறையாகவும் இருந்தன. இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டிய 6 இலட்சம் பேரில் முதலில் 4,00000 பேரே விண்ணப்பித்தனர். (இலங்கைக்கு கூடுதலானேர் விண்ணப்பித்தனர்) இலங்கை பிரஜா உரிமை நிராகரிக்கப்பட்டமை இனக்கலவரங்கள் போன்றவற்ருல் இவ்விண்ணப்பம் 5,06000 ஆக உயர்ந்தது. ஏனைய 94,000 பேர் இந்தியா போக விரும்பாது இலங்கையில் வாழவே விரும்பினர். இவர்கள் நாடற்றவர் என்ற நிலையிலேயே இருந்தனர். 94 ஆயிரம் பேருக்கும் குடியுரிமை வழங்கத் தேவையில்லை என்று கூறப்பட்டு வந்தது. இவர்களுக்கு குடியுரிமை வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டது நல்ல விடயமே. அது வரவேற்கப்பட வேண்டியது. இது இம்முடிவு அவசரமாக கொடுக்கப்பட்டதன் பின்னணி என்ன? தமிழீழப் போராட்டம் வலுவடைந்து செல்லும் நிலையில் மலையக மக்களும் அரசுக்கெதிராக திரும்பாமல் தடுப்பதற்கும் வெளி உலகிற்கு நாடற்றவர் பிரச்சினையை தான் தீர்த்து விட்டதாக காட்டுவதற்குமே ஜே. ஆர். அவசரமாக இந்நடவடிக்கையை மேற்கொண்டார். தொண்டமானுடன் கலந்தாலோசிக்காமலே இம்முடிவு எடுக்கப்பட்டது என்பதை பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டுள்ளார். தொண்டமானின் செல்வாக்கு வளருவதை ஜே. ஆர். விரும்பவில்லை. பின்னர் தொண்டமானை சமாளிக்கும் நடவடிக்கைகள் வழமைபோல் நடைபெற்றன. தொண்டமானின் பத்திரிகை அறிக்கை வேடிக்கையானது. "நான் ஜனுதிபதியிடம் குடியுரிமை வழங்கும்படி கோரிக்கை விடுத்தேன். பின்னர் நான்

இந்தியா சென்று வரும்போது எல்லாம் நடந்தேறிவிட்டது. தனக்குத் தெரியாமலே குடியுரிமை வழங்கும் தீர்மானம் நடந்தேறி விட்டது''. நானில்லையெனின் இந்நாட்டில் ஜனநாயகம் செத்து மார்க்ஸியவாதிகள் ஆளும் நிலை ஏற்பட்டிருக்கும். இதிலிருந்து தொண்டமான் யார் என்பதை நாம் இனங்காண முடியும். தொண்டமான் நாட்டிலில்லா சமயம் மலையக மக்களுக்கு எதிராக சிங்கள காடையர்கள் தாக்குதல் தொடுத்த சமயம் இம்முறை மலையக மக்கள் எதிர்த்துத் தாக்குதல் நடத்தி அவர்களை பின்வாங்கச் செய்தார்கள். மலையக மக்களிடம் உள்ள போர்க்குணும்சதனை வெளிக்கொண்டுவர விடாமல் அவர்களை கோழைகளாக சரணுகதியடைந்து தன்னம்பிக்கையற்றவர்களாகவும் ஆக்கிய வேலையைச் செய்த தொண்டமானை நாம் எப்படிப் பார்ப்பது. வரலாற்றினைப் படைக்கக்கூடிய மக்களை கோழைகளாக்கிய தொண்டமான் வரலாற்று வீரனு? துரோகியா?

## 3. பாதுகாப்பு வலையச் சட்டம் ஆக்கிரமிப்பு இராணுவப் பொறியின் ஒரு கண்ணி மட்டுமே

காட்டுமிராண்டித்தனமான ஜே. ஆர். அரசு வடக்கில் உள்ள தனது இராணுவ முகாம்களை சுற்றி ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலையச் சட்டத்தை அண்மையில் அறிவித்துள்ளது. இதன்படி இந்த ஆயிரம் மீற்றர் பிரதேசத்திற்குள் எந்தநேரத்திலும் பீரங்கிகளாலும் மற்றும் கொடூரமான ஆயுதங்களாலும் தாக்குதல் நடத்துவதற்கு தனது படைகளுக்கு பூரண அதிகாரம் வழங்கியுள்ளது. இதன் அர்த்தம் இந்தப் பாதுகாப்பு வலையத்திற்கு வெளியில் அரசு ஆயுதப் படைகள் தாக்குதல் நடத்தமாட்டாது என்பதல்ல!

உண்மை என்னவெனில் அண்மைக் காலங்களில் விடுதலைப் போராளிகளின் ஓரளவு வளர்ச்சி பெற்ற பதில் தாக்குதல் நடவடிக்கைகளினுல் அரச படைகள் தாம் நினைத்தபடி தமது முகாம்களை விட்டு வெளியே வந்து போராளிகள் மீதும் பொது மக்கள் மீதும் தாக்குதல் நடத்தமுடியாதுள்ளது. இதன் காரணமாக முகாம்களில் முடங்கிக்கிடக்க வேண்டியுள்ளது. சில இடங்களில் முகாம்களின் மீதும் விடுதலை இயக்கங்கள் தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டன. இதனுல் அச்சமடைந்த அரச ஆயுதப் படைகளை, போராளிகள் தங்களை நெருங்கித் தாக்குதல் நடத்தாமல் இருப்பதற்கே இப்பாதுகாப்பு வலையச் சட்டத்தைப் பிறப்பித்தது. இதுதான் உண்மையே தவிர, மற்றும்படி இதன் அர்த்தம் ஆயிரம் மீற்றர் வலையத்திற்கு அப்பால் அரச படைகள் தாக்குதல் நடத்தமாட்டா என்பதல்ல.

இந்த தற்காலிக பின்வாங்குதல் நிலையை ஈடுசெய்ய அரசு புதிய கொடூரமான முறையை இப்பொழுது கையாள ஆரம்பித்துள்ளது. இதன்படி, இப்பொழுது அரசு, விமானங்கள் மூலம் தமிழ் பகுதிகளில் குண்டு வீசுதல், தமது முகாம்களில் இருந்து சக்திவாய்ந்த பீரங்கிகள், ரொக்கட்டுகள் மூலம் நீண்ட தூரங்களைக்கூடத் தாக்குதல் என்பவற்றை கையாள ஆரம்பித்துள்ளது.

எனவே ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலையம் என்பது அரசின் முழு அடக்குமுறை இராணுவ நடவடிக்கையின் ஒரு அம்சம் மட்டுமே. ''ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலையச் சட்டத்தை நீக்கு'' என்ற பொதுமக்களின் ஏகோபித்த கோஷம் அரசாங்கத்தின் பரவலான குண்டு வீச்சு நடவடிக்கையின் மூலம் பெறுமதியற்றதாக்கப் பட்டுள்ளது. எனவே எமக்கு முன்னுல் உள்ள ஒரே வழி, தமிழ் பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள சிங்கள பேரினவாத அரசின் ஆக்கிரமிப்பு ஆயுதப்படைகளை முற்றுமுழுதாக எமது பிரதேசத்தில் இருந்து விரட்டியடிப்பதற்கான தற்காப்பு யுத்தத்தில் முழு தமிழ் மக்களையும் அணிதிரட்டு

வதே விடுதலை இயக்கங்கள் செய்ய வேண்டிய கடமையும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டிய விஷயமும் இதைத்தவிர வேறில்லை.

இராணுவ ரீதியில் நோக்கும்போது விமான, பீரங்கி, ரொக்கட் தாக்குதல்களை எதிர்த்தி முறியடிப்பதில் ஆயுதரீதியிலும், போரிடும் திறமையிலும் வலுப் பெறுவதும் மக்களைத் தற்காத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதுமே எம் முன்னுல் உள்ள இரண்டு உடனடிக் கடமைகளாகும். இவற்றை செய்வதன் மூலமே எதிரியை பின்வாங்க வைக்கவும் போராட்டத்தில் மக்களுக்குள்ள தன்னம்பிக்கையை வளர்த்துச் செல்லவும் முடியும்.

## 4. பிலிப்பைன்ஸ் தரும் படிப்பினைகள்

அண்மைக்காலங்களில் இருந்து கொடுங்கோலாட்சிகளில் ஒன்று எனக் கருதப்பட்ட மார்க்கோஸின் 20 வருட ஆட்சி பிலிப்பைன்ஸின் முடிவிற்கு வந்தது. கியூபாவின் படிஸ்ட்டா, தென்வியட்நாம் வான்தியூ, கம்பூச்சிய லொன்நொல், ஈரான் ஷா, நிக்கரகுவா சோமோசா, உகண்டா இடிஅமின் போன்றோருக்கு நடந்ததே மார்க்கோஸிற்கும் நடந்துள்ளது.

மார்க்கோஸின் ஆட்சி முடிவுக்கு வந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டாலும் மக்களுக்கு விடிவு பிலிப்பைன்ஸில் கிடைக்கவுமில்லை, சில பத்திரிகைகள் குறிப்பிட்டது போல் பிலிப்பைன்சில் எதுவித சமூகப் புரட்சியும் நடைபெறவுமில்லை. அமெரிக்காவில் நவகாலனித்துவ சுரண்டலின் கொடுமைக்குச் சிக்குண்டு நெருக்கடிக்குள் தவிக்கும் பிலிப்பைன்ஸ் மக்களின் வாழ்நிலையில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை.

7000 தீவுகளைக்கொண்ட பிலிப்பைன்சில் வாழும் மக்கள் நீண்டகாலமாகவே அந்நிய ஆக்கிரமிப்பு தலையீட்டிற் கெதிராக போராடிவந்துள்ளனர். கடந்த நூற்றுண்டு கடைசிவரைக்கும் ஸ்பானிய காலனித்துவ வாதிகளுக்கெதிராக பிலிப்பைன்ஸ் மக்கள் போராடிவந்துள்ளனர். ஸ்பானியரிடமிருந்து பிலிப்பைன்ஸை பறித்தெடுத்த, அமெரிக்கா 40 வருடம் ஆட்சி செய்தது. இக்காலகட்டத்திலும் தமது சுதந்திரத்திற்காக பிலிப்பைன்ஸ் மக்கள் போராடிவந்துள்ளனர். பின்னர் இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது ஜப்பான் பிலிப்பைன்சை கைப்பற்றி தன்வசப்படுத்தியது. அமெரிக்க காலனித்துவத்திற்கெதிராக மக்கள் போராடியது போல் ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கெதிராகவும் பிலிப்பைன்ஸ் மக்கள் போராடினர். இப்போராட்டத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சி தலைமைதாங்கியது. கம்யூனிஸ்ட்கட்சியின் தலைமையிலான ராணுவம் 'ஹக்ஸ்' என அழைக்கப்பட்டனர். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஜப்பானின் தோல்வியைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியதிகாரத்தைப் பிடிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் தவறும் அமெரிக்காவின் தலையீடும் அங்கு மீண்டும் பிற்போக்கு சக்திகளின் ஆட்சிக்குவர வழிவகுத்தன. பிலிப்பைன்ஸ் மீண்டும் அமெரிக்காவின் நவகாலனியாக மாற்றம் பெற்றது. பிலிப்பைன்சின் ஜனுதிபதியாக ராமொஸ் மக்காசாய் இருந்தார். முழு பசுபிக் பிராந்தியத்தையும் கட்டுப்படுத்த பிலிப்பைன்ஸ் சிறந்த ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமாகையால் பிலிப்பைன்ஸை தன்கட்டுப்பாட்டில் அமெரிக்கா வைத்திருந்தது. பிலிப்பைன்சின் இரண்டு பெரிய இராணுவத் தளங்களை உருவாக்கியது. கொரிய யுத்தத்தில் ஏற்பட்ட தோல்விக்குப்பின் வியட்னும் யுத்தத்திற்கு பிலிப்பைன்ஸ் தளங்கள் மிகவும் உதவியாக அமைந்தன. வியட்னும் யுத்தம் உச்சகட்டத்தை யடைந்த கட்டமான 1965இல் மார்க்கோஸ் பிலிப்பைன்ஸ் ஜனுதிபதியாக முதல் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவர் அமெரிக்க கைக்கூலியாகவே தொழிற்பட்டு வந்தார். இவர் மீண்டும் 1969இல் ஜனுதிபதியானுர். இவர்

தானே தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பதற்கு ஏற்றவகையில் 1972இல் அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து அன்று ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைச் சமாளித்து அதன்பின் அண்மைக்காலம் வரைக்கும் தானே சர்வாதிகாரியாக ஆட்சி செய்து வந்தார். 1970க்குப் பின் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலில் புதிய மக்கள் ராணுவம் (NPA) மக்கள் ஜனநாயகப் புரட்சியை நோக்காக கொண்டு போராடி வந்தது. இதைவிட மிந்தானேப் பகுதியில் முஸ்லிம் மக்கள் (மோரோ மக்கள்) தமது சுயநிர்ணய உரிமைக்காக மோரோ தேசிய விடுதலை முன்னணியின் தலைமையில் போராடினர். இப்போராட்டங்களின் வளர்ச்சியை கண்ட மார்க்கோஸ் மிக மோசமான முறையில் நசுக்க முனைந்தார். பலர் படுகொலை செய்யப்பட்டனர். ஏராளமானோர் சிறைகளில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். காணாமல் போனோர் ஏராளம். பிலிப்பைன்ஸின் வரவு - செலவு திட்டத்தில் பெரும்பகுதி ராணுவச் செலவிற்கே ஒதுக்கப்பட்டன. அமெரிக்காவும் தனது இருப்பிற்கு அச்சுறுத்தல் வருமோ என எண்ணி பெருமளவில் ராணுவ உதவி, ஆலோசகர்களை பிலிப்பைன்ஸிற்கு வழங்கியது. இவையெதுவும் பிலிப்பைன்ஸ் மக்களின் போராட்டத்தை தடுத்துவிடவில்லை. அங்கு போராட்டம் தடைகளைத்தாண்டி, புதிய உத்வேகத்துடன் முன்னேறியது. கிராமப்புறங்களில் விவசாயிகளை அணிதிரட்டி நிலப்புரட்சிக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நிலச்சீர்திருத்தம் போன்ற நடவடிக்கைகள் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. பல கெரில்லா மண்டலங்கள் உருவாயின.

பிலிப்பைன்ஸின் வெளிநாட்டு கடன் மலைபோல் ஏறியது. ஆசியாவில் எந்த ஒரு நாட்டிற்கும் இல்லாதளவு வேகத்தில் வெளிநாட்டுக் கடன் பெருகியது.

பிற்போக்கு சக்திகள் எவ்வளவு கடனுதவி செய்தாலும் (இதைவிட வெளியில் தெரியாமல் ராணுவ உதவிகள் அமெரிக்காவிடமிருந்து கிடைத்தன). நெருக்கடியைச் சமாளிக்க முடியவில்லை. இந்நிலையில் தன்னை ஜனநாயகவாதியாக காட்டவேண்டிய தேவை மார்க்கோஸிற்கு ஏற்பட்டது. தேர்தல் நடைபெறுமென அறிவித்தார். பிரதான எதிரியான அக்கியூனோவை ஒழித்துக் கட்டினால் தேர்தலில்தான் வெற்றிபெற முடியும் என எண்ணினார். அமெரிக்காவில் அஞ்சாதவாசம்புரிந்த அக்யூனோவை பிலிப்பைன்ஸிற்கு வரவழைத்து திரைமறைவில் நின்று கொலைசெய்வித்தார். மார்க்கோஸ் எண்ணியதற்கு மாறாக மேலும் எதிர்ப்பு வலுவடைந்தது. மார்க்கோஸ் தேர்தலில் வெற்றிபெறுவது கடினம் என்பதை அமெரிக்கா ஏற்கனவே கணித்துக்கொண்டது. ஒரே ஒரு எதிர்கட்சி வேட்பாளராக திருமதி கொராசொன் அக்கியூனோவை நிறுத்தும் நடவடிக்கையில் அமெரிக்காவும் பின்னணியில் நின்று செயற்பட்டது. திருமதி அக்கியூனோ பிலிப்பைன்ஸ் மக்களினதும் மற்றும் ஜனநாயக சக்திகளதும் அமெரிக்க எதிர்ப்பு உணர்வை பயன்படுத்தினார். அமெரிக்கா திருமதி அக்கியூனோவின் ஆதரவாளர்களிடையே தனது கையாட்களை எப்போதும் வைத்திருந்தது. பிலிப்பைன்ஸ் தேர்தல் மிகவும் மோசடிகள் நிறைந்ததாகவிருந்தது. தேர்தல் முடிவை அறிவிக்காமல் தானே ஜனாதிபதியாக இருப்பதற்கு மார்க்கோஸ் கங்கணம் கட்டினார். அமெரிக்காவும் அதனை ஆதரித்தது. மக்களின் எதிர்ப்பு வலுவடைந்து வெகுஜன கிளர்ச்சிகள் வலுவடைந்தவுடன் அமெரிக்கா தனது விசேட பிரதிநிதியாக வெளியுறவுச் செயலர் ஹபீபை பிலிப்பைன்ஸிற்கு அனுப்பி மார்க்கோஸ், திருமதி அக்கியூனோ இருவரையும் இணைந்து ஆட்சிபுரியும்படி கேட்டுக்கொண்டது. அது சரிவராது போகவே பாதுகாப்பு அமைச்சர் என்ரைஸ், உதவி ராணுவத் தளபதி ராமொஸ் ஆகியோரை அணுகி அவர்களை அக்கியூனோ பக்கம் சாரும்படி ஹபீப் ஆலோசனை வழங்கினார். இவ்வாலோசனைப்படியே

திருமதி அக்கியூனே பக்கம் அவர்கள் இருவரும் சேர்ந்துகொண்டனர். அமெரிக்கா முழுமையாக திருமதி அக்கியூனேவை நம்பாவிடினும் தனது விசுவாசமான கையாட்களாக பாதுகாப்பு அமைச்சர், உதவி ராணுவத் தளபதி இருப்பதனால் தேவையேற்படின் திருமதி அக்கியூனேவை கொலை செய்விக்கவோ அன்றி ராணுவச்சதி மூலம் தூக்கி வெளியில் போடவோ முடியும் என்பதை அமெரிக்கா உணர்ந்து கொண்டது. அமெரிக்கா தனது புதிய தந்திரோபாயம் மூலம் புதிய அரசையும் தன்பக்கம் ஆதரவுடையதாக இருப்பதையும் தனது தளங்களின் இருப்பையும் உறுதி செய்து கொண்டது. அமெரிக்காவின் இன்றைய நிலை, ஏற்கனவே தான் இருக்கும் ஸ்தானத்தை காப்பாற்றுவதே. சோவியத் யூனியனின் நிலையோ புதிய ஸ்தாபனங்களை உருவாக்குவதே. பிலிப்பைன்சில் அதன் உண்மை உருவம் வெளிப்பட்டது. மார்க்கோஸ் பிலிப்பைன்ஸிலே இருக்க முடியாத நிலை உருவாகியும்கூட மார்க்கோஸை ஆதரிப்பதாக வெட்கமின்றி பகிரங்கமாக அறிவித்தது. தென் வியட்னாமில் அமெரிக்கா விட்டுசென்ற ராணுவ தளத்தை இன்று சோவியத் யூனியனுக்கு வியட்னாம் அரசு வழங்கியது மாத்திரமல்ல. சோவியத்தின் கடனாளியாக வியட்னாம் மாறியுள்ளது. அமெரிக்காவின் பிலிப்பைன்சில் உள்ள தளங்களைப் பெறுவதும் தனது நவகாலனித்துவ சுரண்டலிற்கு பிலிப்பைன்ஸை உட்படுத்துவதுமே சோவியத்தின் ஆவல். இன்று இரு வல்லரசுகளினதும் போட்டியை உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டு விவகாரங்களிலும் காணலாம். பிலிப்பைன்ஸும் அதற்கு விதிவிலக்கல்ல.

திருமதி அக்கியூனேவின் வரவு ஏதோ பெரிய மாற்றம் என பலர் கூறியதுபோல் ஒன்றல்ல. தேர்தல் காலத்தில் தான் பதவிக்கு வந்தால் கம்யூனிஸ்ட்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக திருமதி அக்கியூனே அறிவித்தார். இன்று கம்யூனிஸ்ட்டுகளை ஆயுதங்களை கீழே போட்டு வருமாறு அறிவித்துள்ளார். பிலிப்பைன்சில் மக்கள் ஜனநாயகம் மலரும் வரைக்கும் தாம் ஆயுதங்களைக் கீழே போடமாட்டோம் என்பதை கம்யூனிஸ்ட் கட்சி தெளிவாக தெரிவித்துவிட்டது.

அமெரிக்கத் தளங்கள் தொடர்ந்து இருக்கத்தான் போகின்றன. மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. பிலிப்பைன்ஸ் மக்கள் ஒரு மக்கள் அரசை உருவாக்குவதன் மூலமே தமது விடுதலையை உறுதிப்படுத்த முடியும். இதனை இன்று போராடும் பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியும் புதிய மக்கள் ராணுவமும் முன்னெடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

---

*பூர்ஷுவா ஜனநாயகத்தின் மீதமிச்ச சின்னங்களை அழிப்பதன் மூலம், ஒரு சர்க்கார் அமைப்பை ஒரு பகிரங்கமான வன்முறை அமைப்பாக உயர்த்துவதன் மூலம் பாசிஸம் ஜனநாயகப் பிரமைகளை தகர்த்துவிடுகின்றது.*

**- ஜோர்ஜ் டிமிட்ரோவ்**

# விமர்சனம் - சுயவிமர்சனம்

கடந்த கால வேலைகளில் உள்ள சரியான அம்சங்களையும் தவறான அம்சங்களையும் ஒரு விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து முன்வைப்பது விமர்சனமாகும். இது தன்னைப்பற்றியே தான் செய்யின் சுய விமர்சனமாகின்றது. கடந்த காலங்களில் உள்ள தவறுகளில் இருந்து படிப்பினைகளைப் பெற்று எதிர்காலத்தில் அத்தவறுகளைத் திருத்தி ஸ்தாபனத்தையும் எம்மையும் மேலும் வளர்த்துக்கொள்வதென்ற அடிப்படையிலேயே மனப்பூர்வமாகச் செய்யப்படும் ஒரு நடவடிக்கையாக இது அமைகின்றது. சுய விமர்சனமானது, தன்னைத்தானே கருராக விமர்சித்து தவறுகளையும் சரிகளையும் உணர்வதன்மூலம் தன்னைத் திருத்தும் நோக்கில் நடைமுறையில் உறுதியாக முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே 'சுயவிமர்சனம்' பூரணத்துவம் பெறுகின்றது.

மார்க்சியத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களாகிய நாம் எமது மக்களின் அதிஉயர்ந்த நலன்களுக்காகப் போராடுபவர்கள்; நாம் தியாகங்களுக்கு அஞ்சாதவர்கள்; நமது இலட்சியம் நீதியானது என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள், எனவே மக்களின் தேவைகளுக்குப் பொருந்தாத, எதிரான எந்தக் கருத்தையும், கண்ணோட்டத்தையும், எமது ஸ்தாபன நடைமுறையையும் களைந்தெறிய நாம் தயங்கக்கூடாது இவை எம்மில் இருப்பின் சுயவிமர்சனம் மூலமும், ஏனைய தோழர்களின் எம்மீதான விமர்சனங்கள் மூலமும் களைந்தெறியப்பட வேண்டும். இவ்வாறே ஏனைய தோழர்களுக்கும், ஸ்தாபனத்துக்கும்.

இதுபற்றி தோழர் மாவோ சொல்கையில் ''பூரணமான பொருள்முதல்வாதிகள் அச்சமற்றவர்கள்; நமது சக போராளிகள் எல்லோரும் தமது பொறுப்புகளுக்குத் தோள் கொடுப்பவர்கள்; கஷ்டங்கள் எல்லாவற்றையும் வெற்றிகொள்பவர்கள்; பின்னடைவுகளுக்கோ ஏளனங்களுக்கோ அஞ்சமாட்டார்கள். கம்யூனிஸ்டுகளாகிய எங்களை விமர்சனம் செய்வதற்கும் தமது ஆலோசனைகளைக் கொடுப்பதற்கும் அஞ்சமாட்டார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.''

சரியான முறையில் விமர்சனம் சுயவிமர்சனம் செய்வதால்மட்டுமே நாம் எமது தவறுகளைக் களைந்து புரட்சிப்பாதையில் முன்னேறமுடியும். விமர்சனம் செய்யப்படும் நோக்கத்தையும் முறையையும் மாவோ பின்வருமாறு விளக்குகின்றார்.

''விமர்சனம் செய்வதில் நமக்குள்ள நோக்கம் வைத்தியர் ஒருவர் நோய்க்குச் சிகிச்சை அழிப்பதுபோல; நோயாளியைக் காப்பாற்றுவதேயன்றி அவர் இறப்பதற்குச் சிகிச்சை அழிப்பதல்ல. குடல்வால் நோயுடைய ஒருவர் அறுவை வைத்தியர் அவருடைய குடல்வாலை அகற்றியதும் காப்பாற்றப்படுகிறார். தவறுகள் இழைத்த ஒருவர் சிகிச்சைக்கு அஞ்சி தனது நோயை மறைக்காத வரையில், அல்லது சிகிச்சைசெய்ய முடியாமல் போகுமளவுக்கு தனது பிழைகளில் அழுந்தி நிற்காத வரையில், அவர் உண்மையாகவும் விசுவாசமாகவும் குணப்படுத்த விரும்பி தனது தவறுகளைத் திருத்தும் வரையில் நாம் அவரை வரவேற்று அவர் ஒரு நல்ல தோழராய் மாறுவதற்கு அவருடைய நோய்க்கு சிகிச்சை அளிக்க வேண்டும். எவ்வித கட்டுப்பாடுமின்றி, அவரை விளாசித் தள்ளுவோமாயின், நாம் ஒருபோதும் வெற்றிபெறமுடியாது. ஒரு சித்தாந்த அல்லது அரசியல் நோயைக் குணப்படுத்தும்போது நாம் கடினமாகவும் மூர்க்கத்தனமாகவும் நடந்துகொள்ளக் கூடாது. பதிலுக்கு, நோயாளியைக் காப்

பாற்ற நோய்க்குச் சிகிச்சையளிப்பது என்ற அணுகு முறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே பயனுள்ள சரியான ஒரே ஒரு வழியாகும்.''

மேற்படி விடயங்களை எம்மில் பல தோழர்கள் படித்திருக்கின்றோம். பல தோழர்களுக்குப் போதித்து இருக்கின்றோம். ஆனால் நடைமுறையில் இதன்படி நாம் ஒழுகாமல் ஏனைய தோழர்களிடத்து எதிர் பார்க்கும் போக்கை அதிகமாகக் காண்கின் றோம்.

எமது விமர்சன முறைகளில் பின்வரு வன வற்றைக் காணக்கூடியதாக இருக் கிறது.

**1. பிரதான விடயங்களை மறந்து சிறிய விடயங்களில் கவனம் செலுத்துவது:-**

விமர்சனத்தின் பிரதான கடமை அரசி யல் ஸ்தாபனப் பிழைகளைச் சுட்டிக்காட்டு வதே என்பதைப் புரிந்து கொள்ளாமையி னாலோ அல்லது புரிந்தும் நடைமுறையில் கைக்கொள்ளாமையினாலோ இருப்பதனா லேயே எம்மில் சில தோழர்கள் இவ்வாறு செய்கின்றனர். தனிநபர் குறைபாடுகளைப் பொறுத்தவரையில் அவை அரசியல் ஸ்தா பனப் பிழைகளுடன் தொடர்புடையனவாய் இருந்தால் ஒழிய கூடுதலான விமர்சனம் செய்வது அனாவசியமாகும். அப்படிச் செய் தால் சம்பந்தப்பட்ட தோழர்கள் யாது செய் வதென அறியாமல் தடுமாறி விடுகின்றனர். இத்தகைய விமர்சனங்கள் வளர்ச்சி பெறின் ஒவ்வொருவரும் அஞ்சி மிதமிஞ்சிய எச்சரிக்கையால் கட்சியின் அரசியல் கட மைகளை மறந்து விடுவர். இது மிகப் பெரிய அபாயமாகும்.'' (கட்சியில் நிலவும் தவறான கருத்துக்களை திருத்துவது பற்றி - மாஓ)

**2. விமர்சனமானது தனிப்பட்ட தாக்குதல் போல் மாறிவிடுவது:-**

இதன் விளைவாக தனிநபருக்கு மாத்தி ரம் அல்ல. கட்சி ஸ்தாபனத்துக்கும் கேடு விளைவிக்கப்படுகின்றது. இது குட்டிபூர் சுவா வர்க்க தனிநபர்வாதத்தின் ஒரு வெளிப்பாடேயாகும். இது தவிர ஒரு தோழர் இன்னொரு தோழரில் விமர்சனம் வைத்தால் அதை ஒரு தாக்குதலாகக் கருதி விமர்சனம் வைத்த தோழரில் பதில் விமர் சனம் வைக்க அவர்விடும் தவறுகளை தேடி அலைதல்.

**3. விமர்சனங்கள் சரியான சமயத்தில் வைக்கப்படாது எல்லாத் தவறுகளை யும் சேர்த்துவைத்து குற்றச்சாட்டுகள் போல் வைத்தல்:**

ஒரு தோழர் தவறு விடும்போது உரிய நேரத்தில் (அப்போதே) சுட்டிக்காட்டி விமர்சிப்பதால் அவர் அத்தவறுகளை திருத் துவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. அல் லாமல் பல தவறுகளை விடும் வரை விமர்சிக் காது இருந்துவிட்டு பின் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து விமர்சிப்பது. இது குற் றச்சாட்டு போலவே அமையும். இதனால் குறிப்பிட்ட தோழர் தனது தவறுகளைத் திருத்துவதற்குப்பதிலாக தன்மீதே ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்படவைக்கும். இது அவர்களது வேலைசெய்யும் ஆற்றலைக் குறைத்துவிடும்.

**4. தெரிந்த நண்பர் என்ற காரணத்தாலோ அல்லது விமர்சனங்களுக்குப் பழக்கப் படாமையாலேயோ தவறுகளைச் சுட்டிக் காட்டாது விடல்:-**

''இது சுத்த தாராளவாதமேயாகும். தாராளவாதமானது சித்தாந்தப் போராட் டத்தை நிராகரித்து கோட்பாடற்ற சமா தானத்திற்காக நிற்கின்றது. இதன் விளை வாக உளுத்துப்போன பண்பற்ற மனோ பாவம் தோன்றி கட்சியிலும், புரட்சிகர ஸ்தாபனங்களிலும் உள்ள சில பிரிவுகளை யும், தனிநபர்களையும், அமைப்பையும் அர சியல் ரீதியில் சீர்குலைக்கின்றது.

(மாஓ - தாராளவாதத்தை எதிர்ப்போம் என்ற கட்டுரையில் தே. ப. தொ.)

**5. முதுகுக்குப்பின்னான விமர்சனம்:-**

தோழர்களுக்கு முன்னே விமர்சனம் வைத்துப் பழக்கமின்மையால் அல்லது தான் ஏன் வீணாகப் பிரச்சினைப்படவேண்டும் என்று எண்ணி தோழர்களுக்குமுன்னே விமர்சனம் வைக்காது அவர் இல்லாத இடத்து அவரைப் பற்றிய விமர்சனங்களை வைத்தல். இதுவும் தாராளவாதத்தினதும் தனிநபர் வாதத்தினதும் வெளிப்பாடேயாகும்.

'இது தவிர சில தோழர்கள் முதுகுக்குப் பின்னான விமர்சனத்தை வேண்டுமென்றே அவதூறு பரப்பும் நோக்கில் செய்தல் இது தனிநபர்களையோ கட்சி ஸ்தாபனத்தையோ வளர்ப்பதற்குப் பதிலாக சீர்குலைக்கவே செய்யும்.

**6. சுயவிமர்சனத்தை பாவமன்னிப்பாக கருதல்:-**

சுயவிமர்சனத்தை மனப்பூர்வமாக தனது தவறுகளைத் திருத்தும் நோக்கில் செய்யாமல் கட்டாயத்தின்பேரிலோ அல்லது செய்ய வேண்டுமென்பதற்காகவோ செய்வதால் நமது தவறுகளை நாம் திருத்திக்கொள்ள முடியாதவர்களாவோம். விட்ட தவறுகளை மீண்டும் விடுபவர்களாவோம். சுயவிமர்சனத்தை நடைமுறையில் கடைப்பிடிப்பதன்மூலமே சுயவிமர்சனம் பூரணத்துவமடைகின்றது என்பதை மறந்தவர்களாவோம்.

விமர்சனம் செய்யும்போது மேலணி கீழணி உறவுக்கேற்ப அணுகுமுறையில் சிறிது மாற்றம் இருக்கும். தாராளவாதத்தை கடைப்பிடிப்பதாக இருக்காது. கீழணிக்கு குற்ற உணர்வு ஏற்படுத்தாத வகையில், தவறுகளைத் திருத்துவதற்கு உதவியாக, ஆலோசனை வழங்கும் விதத்தில் இருக்க வேண்டும். அத்துடன் விமர்சனம் கூராக இருக்கவும் வேண்டும்.

ஒரு கட்சி ஸ்தாபனத்தில், "தனிநபரின் வளர்ச்சி ஸ்தாபனத்தில் தெரியும்; ஸ்தாபனத்தின் வளர்ச்சி தனிநபரில் தெரியும்" என்ற வகையில் விமர்சனம் சுயவிமர்சனத்தை தனிநபர்களும், ஸ்தாபனமும் ஒழுங்காகச் செய்வதன் மூலம், கடந்த காலங்களில் விட்ட தவறுகளை களைந்து புரட்சிப் பாதையில் முன்னேறக்கூடியதாக இருக்கும். ஒரு ஸ்தாபனத்தினுள் விமர்சனம் - சுயவிமர்சனம் இல்லையேல் அது புரட்சிகர ஸ்தாபனமாக இருக்கமுடியாது. தவறுகளைக் களைவதற்கு விமர்சனம் - சுயவிமர்சனமே ஒரே ஒரு சரியான வழியாகும்.

இவை தவிர நாம் அமைப்புக்கு வெளியே ஐக்கியமும் போராட்டமும் (ஏனைய விடுதலை இயக்கங்களுடன்) என்ற கோட்பாட்டைப் பின்பற்றுவதென முடிவு எடுத்திருந்தோம். அதாவது போராட்டத்திற்காக ஐக்கியப்படுவோம். ஐக்கியத்திற்காகப் போராடுவோம் என்ற கோசத்தை முன்வைத்தோம். இதன்பொருள் - ஏனைய இயக்கங்களுடன் உடன்படக்கூடிய விடயங்களில் உடன்பட்டு வேலை செய்தலும், அவற்றின் தவறான போக்குகளை அவர்களுக்கு சினேகபூர்வமாகச் சுட்டிக்காட்டி, அவர்களைத் திருத்தும் நோக்கில் விமர்சித்து புரட்சிப்பாதையில் அழைத்துச்செல்லுவதுமாகும்.

ஐக்கியமும் போராட்டமும் என்ற கோட்பாட்டை பின்பற்றுவதன்மூலம், தவறான பாதையில் செல்லும் இயக்கங்களிற்கு சரியான வழிகாட்டலைக் கொடுக்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. இவ்வியக்கங்கள் புரட்சிப்பாதையில் வராத இயக்கங்களாக இருப்பின், அவற்றில் உள்ள நல்ல சக்திகள் எமது சரியான வழிகாட்டலை நோக்கி வருவதற்கான வகையில் எமது விமர்சனங்கள் இருக்கவேண்டும். சரியான சக்திகளை எம்மை நோக்கி அணிதிரட்டுவதன் மூலம், தவறான சக்திகளை இனம் காணவும்முடியும். புரட்சிப்பாதைக்கு எதிரான கருத்துகளை நாம் மக்கள்முன் அம்பலப்படுத்தவேண்டும். அம்பலப்படுத்தமுன் இவ் வியக்கங்களுக்கு அவற்றை சுட்டிக்காட்டவேண்டும். இவை மட்டுமல்லாது ஏனைய இயக்கங்களின் விமர்சனம் மூலம் எமது ஸ்தாபனத்தின் தவறுகளையும் திருத்திக்கொள்ளமுடியும். இதுவே ஐக்கியமும் போராட்டமும் என்பதன் பொருளாகும்.

(NLFT இல் உட்கட்சிப் போராட்டத்தின் போது எம்மால் வைக்கப்பட்ட கட்டுரையொன்றின் ஒரு பகுதியே இது.)

# தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமும் ஈழ தேசிய விடுதலை முன்னணியும் (ENLF)

இன்று தமிழீழத்தில் பல்வேறு இயக்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 'சோஷலிச தமிழீழம்' அமைக்கப் போவதாக கூறிக் கொள்கின்றன. சோஷலிசம் என்பதற்கு பல்வேறு வியாக்கியானங்களும்கொடுக்கப்படுகின்றன. 1983 யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து தமக்கான படைகளை ஒவ்வொரு இயக்கமும் கட்டிக்கொண்டன. எதிரியின் ஒடுக்குமுறை உச்சகட்டத்தையடைந்ததும் எதிரி தன்னை பலப்படுத்திக் கொண்டதும் இயக்கங்களிடையே ஐக்கியத்தின் தேவையை உணர்த்தின. இந்திய அரசுடனை தொடர்பிற்கும் ஒன்றிணைந்து செல்வது தேவைப்பட்டது.

1984 ஏப்ரலில் EPRLF, EROS, TELO ஒன்றிணைந்து ஈழ தேசிய விடுதலை முன்னணியை உருவாக்கின. ஒரு பொது திட்டத்தினடிப்படையில் உருவாக்கப்படாவிடினும் பொது நோக்கில் ஐக்கியத்திற்கு வந்தது நல்ல அம்சமே. ENLF ஆரம்பத்திலிருந்து சகல தேசபக்த சக்திகளையும் இணைத்துக் கொள்வதில் எவ்வளவு ஆர்வம் காட்டியது? அதில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் பெற்றது? என்பது கேள்விக்குறியே. இது விமர்சிக்கப்பட வேண்டியது.

பின்னர் 1985இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இதில் இணைந்து கொண்டதும் ENLFஇன் வளர்ச்சியே. ENLF முதலில் PLOTஉடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இணைந்த பின் அப் பேச்சுவார்த்தை தடைப்பட்டது ENLF கூடுதல் அக்கறையெடுத்திருப்பின் PLOTஐயும் இணைத்திருக்க முடியும்.

இவ் ENLF ஆனது எதிரிக்கெதிரான ஐக்கிய முன்னணி என்ற வகையில் பின் வரும் குறைபாடுகளையும் கொண்டுள்ளது.

1. தேசபக்த சக்திகள், விடுதலைக்காகப் போராடும் ஏனைய சிறிய அமைப்புகள் என்பவற்றை ஐக்கியப்படுத்த முயற்சிக்கவில்லை;

2. ஐக்கிய முன்னணிக்கான பொது வேலைத் திட்டம் இன்மை;

3. இயக்க முரண்பாடுகள் இன்றும் ஆயுத முனையில் தீர்க்கப்படல்;

4. இயக்கங்களுக்கும் மக்களுக்கும் உள்ள இடைவெளி குறைவதற்குப் பதிலாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளமை போன்றவையாகும்.

எதிரிக்கெதிரான போராட்டத்திற்கு சகல தேசபக்த சக்திகளையும் ஐக்கியப்படுத்துவது அவசியமாகும். எதிரிக்கெதிரான போராட்டத்திற்கான ஐக்கியம் எனக் கூறிக் கொண்டாலும் இந் நோக்கத்தை நோக்கி ENLF ஆனது வளர்ந்து வரவில்லை. ENLF சர்வதேசரீதியான பிரச்சாரத்திற்கும், வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களிடம் இருந்து பணம் சேகரிப்பதற்கும், இந்திய அரசுடனை தொடர்புக்குமே இன்று பயன்படுகின்றது. ஆனாலும் மக்கள் இயக்கங்களிடையே இந்தளவிற்கு தன்னும் கூட்டு உருவானதை வரவேற்கிறார்கள். மக்கள் ENLFஇடம் நிறையவே முன்னர் எதிர்பார்த்தனர். இயக்கங்களின் குழுவாதம் பல வழிகளிலும் வெளிப்பட்டது.

இயக்க மோதல்கள் தொடர்ந்தன. ENLFஇல் அங்கம் வகிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ விடுதலை இயக்கமும் (TELO) மோதிக் கொண்டன. EPRLF உம், தமிழீழ விடுதலைப் புலிகளும் மோதிக் கொண்டன. இயக்கங்களிடையே ஏற்படும் இது போன்ற பிரச்சினைகளைக் கூட தீர்க்க முடியாது ENLF திண்டாடியது. தமக்குள் உள்ள முரண்பாடுகளை பேசித் தீர்க்காவிடின் எதிரிக்கெதிரான போராட்டத்தில் எப்படி முழு சக்தியையும் ஒன்று குவித்து போராட முடியும்?

அண்மையில் யாழ். குடா நாட்டில் முகாம்களை விட்டு இராணுவத்தினர் வெளியேறுவதை தடுப்பதில் இயக்கங்கள் கூட்டாக செயற்பட்டன. இது மக்களுக்கு ஓரளவு நம்பிக்கையைக் கொடுத்தது.

ENLF ஆனது இன்றைய தேவையை உணர்ந்து எதிரிக்கெதிரான போராட்டத்திற்காக தன்னை பரந்துபட்ட ஐக்கிய முன்னணியாக மாற்றிக் கொள்ளாவிடின் எதிரிக்கெதிரான போராட்டத்திற்கான தேவையின் பொருட்டு வேறு ஐக்கிய முன்னணியை (இயக்கங்களின் கூட்டு) உருவாக்க வேண்டி ஏற்படும். இது போராட்ட சக்திகளை பிளவுபடுத்துவதாக இருப்பினும் கூட தவிர்க்க முடியாததாகலாம். எனவே ENLFஐ சகல தேசபக்த சக்திகளையும் உள்ளிட்ட பரந்துபட்ட ஐக்கிய முன்னணியாக மாற்றுவதே இன்றைய தேவையாகும். ஏனைய சிறு இயக்கங்கள் ENLFஇல் உள்ள ஏதாவதொரு இயக்கத்துடன் சேர வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. அரசியல் கருத்துகளை இந்த வகையில் தடை செய்யலாம் என எண்ணுவது தவறானது. பல்வேறு குழுக்கள் உருவாவதற்கான சமூகப் பின்னணியைப் புரிந்து கொண்டாலே அதனைத் தடுக்க முடியும். வரலாற்றில் பெரிய இயக்கங்களாக இருந்தவை அழிந்துபோனதும் சிறியதாக இருந்தவை பெரியனவாக மாறியதும் காணக்கூடியதாகவுள்ளது. எனவே சரியானது வளர்ச்சி பெறும்; பிழையானது தேய்ந்து போகும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவற்றையுணர்ந்து ENLFஆனது ஏனைய சக்திகளை ஐக்கியப்படுத்த முயற்சிப்பதே இன்றைய பணியாகும். ஒவ்வொரு சக்தியினதும் ஆற்றல் பலம் என்பவற்றிற்கேற்ப அவைகளின் பங்களிப்பு, கூட்டில் அவர்களின் பாத்திரம் பிரதிநிதித்துவம் மாறுபடலாம். குறுங்குழுவாத சிந்தனையிலிருந்து மீண்டு சகல தேசபக்த சக்திகளையும் இணைத்து பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை உருவாக்குவதே ENLFஇன் இன்றைய கடமையாகும்.

## இயக்கங்களிடையேயான மோதல்கள், இயக்க உள் மோதல்கள் துப்பாக்கி முனையில் தீர்க்கப்படுதல் எதிரிக்கு மட்டுமே சாதகமானவை

இயக்கங்களிடையே நடைபெறும் மோதல்கள் பற்றியும் இயக்கங்களிற்குள் நடைபெறும் படுகொலைகள் பற்றியும் 'இலக்கு' சஞ்சிகை முன்னர் பல தடவை சுட்டிக் காட்டியிருந்தது. இயக்க மோதல்கள் எமது போராட்டத்திற்கு பாரிய பின்னடைவைக் கொடுத்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆட்கடத்தல், அடித்துத் துன்புறுத்தல், காட்டிக்கொடுப்பு மற்றும் படுகொலை என்ற வடிவில் இயக்க மோதல்கள் நீண்ட காலமாகவே தொடர்கின்றன. தமிழ் மக்களின் போராட்டம் ஆயுதப் போராட்டம் எனும் முடிவை எடுத்த கட்டத்திலேயே இரகசிய இயக்கத்தில் இருந்த ஒருவர் வெளியேறினால் வேறு அரசியல் இயக்கத்தில் சேர்ந்தால்

மரண தண்டனைக்குரிய குற்றம் எனும்
கருத்து முன்வைக்கப்பட்டது. இதனை மீறு
வோருக்கு மரண தண்டனை வழங்கப்படு
வது சரியென போராளிகளால் ஏற்றுக்
கொள்ளப்பட்டது. அரசியல் பிரச்சினை அர
சியல் ரீதியில் தீர்க்கப்படாமல் ஆயுதமுனை
யில் தீர்க்கப்பட்டது. இயக்கங்களுக்குள்
உட்கட்சி ஜனநாயகமின்மையால் கருத்து
வேறுபாடுகளை முன்வைக்க உரிய களம்
கிடைக்காமையால் சதி நடவடிக்கை
யிலோ குறுக்குவழியிலோ பலரும்
தமது நடவடிக்கைகளை மேற்
கொள்ள வாய்ப்பேற்பட்டது. இயக்கங்க
ளுக்குள் உண்மையான தோழமையின்மை
காரணமாக பரஸ்பர சந்தேகம், போட்டி,
பொறுமை, குழுநலன் மற்றும் தமது தலை
மையை பாதுகாக்கும் எண்ணம், தன்னம்
பிக்கையீனம் என்பனவே ஏனைய இயக்கங்
களிற்கெதிரான உணர்வையும் மாறுபட்ட
கருத்துடைய யாபேரையும் எதிரியாக
பார்க்கும் நிலையை தோற்றுவிக்கின்றது.
எதிரி யார்? நண்பர்கள் யார்? என்ற தெளி
வில்லாமல் எதிரிக்கெதிராக திருப்பவேண்
டிய துப்பாக்கியை நண்பர்களுக்கு எதிராக
திருப்பி எமக்கு நாமே அழிவைத் தேடிக்
கொண்டதோடு எதிரியையும் மேலும் பலப்
படுத்தியுள்ளோம். ஆத்திரகாரனுக்கு புத்தி
மத்திமம் என்பதற்கேற்ப ஒரே இயக்கத்
தில் ஒரே பாயில் படுத்து ஒரே கோப்பை
யில் உண்ட சக தோழனையே கொலை
செய்யுமளவிற்கு மனிதாபிமானம் அற்ற
ளவிற்கு இயக்கப்போராளிகள் மாறியுள்ள
னர். இவ்விதமான தவறான நடவடிக்கை
களினால் பல போராளிகள் படுகொலை செய்
யப்பட்டுள்ளனர். சுந்தரம், இறைகுமாரன்
உமைகுமாரன், தேவன், மனோமாஸ்டர்,
ஜெகன், சிவனேஸ்வரன், நேரு, கூச்,
சேகர், அகிலன், ரூபன் என தெரிந்தவர்
களும் பெயர் தெரியாத பலரும் படு
கொலை செய்யப்பட்டனர். இத்துடன் சந்
ததியார், றேகன், அமீன் போன்றோர்
அண்மையில் படுகொலை செய்யப்பட்டனர்.
இவை யாவற்றிற்கும் மேலாக அண்மை
யில் யாழ் வைத்தியசாலையில் வைத்து 5
போராளிகளான தாஸும் அவரது சகாக்க
ளும் சுட்டுக்கொள்ளப்பட்டனர். இதில்
பொதுமக்கள் இறந்தும் படுகாயமடைந்தும்
உள்ளனர். பின்னர் மறுநாள் இதற்கு
எதிர்ப்பு தெரிவித்து ஊர்வலம் சென்ற
போது மக்கள்மீதும் துப்பாக்கிப்பிரயோகம்
செய்யப்பட்டு இருவர் மரணமானதுடன்
பலர் படுகாயமடைந்தனர். இது எவ்வளவு
கேவலமானது. எந்த மக்களுக்கு விடுதலை
பெற்றுத்தரப் புறப்பட்டோமோ இன்று
அவர்களுக்கு எதிராகவே துப்பாக்கிகள்
திருப்பப்படுகின்றன. இயக்கங்களின் அரா
ஜகத்தையும் அடாவடித்தனத்தையும் தட்
டிக்கேட்கவேண்டியவர்கள் மக்கள்தான்.
வரலாற்றை உருவாக்குபவர்கள் மக்களோ
அன்றி ஆயுதங்களோ அல்லது சில வீரர்
களோ அல்ல என்பதை ஒவ்வொரு போரா
ளியும் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று இந்தியப் பத்திரிகைகளும்
இலங்கை அரசும்கூட இப்படுகொலைகள்
பற்றி பிரச்சாரம் செய்கின்றன. இந்தியா
வில் பலர் படுகொலை செய்யப்பட்டு காடுகளி
லும், புதர்களிலும் போடப்பட்டனர். இன்
னமும் சிலர் சாக்கடையிலும் அரைகுறை
யாக எரிந்த நிலையில் வீதியின் ஒதுக்குப்
புறங்களிலும் போடப்பட்டதை இந்திய மக்
கள் அறிவர். இன்று இயக்கத்திற்கு பிள்
ளைகளை அனுப்பிய ஒவ்வொரு தாயும் தனது
பிள்ளைக்கும் என்ன நடந்தது என ஏங்கும்
நிலையைக் காணலாம். இன்று மக்களே
இயக்கங்களிற்கு எதிராக கருத்து வெளி
யிடுவதை பரவலாகக் காணலாம் இந்நிலை
வளருமாயின் மக்கள் மொத்தத்தில் இயக்
கங்களை நிராகரிக்கும் அபாயநிலை ஏற்பட
லாம். இயக்கங்களிற்கு செல்பவர்களின்
தொகை குறைவதோடு இயக்கத்தைவிட்டு
செல்பவர்களின் தொகை அதிகரித்துக்
கொண்டு செல்கிறது. இது எதிரிக்கு சாதக
மான ஒன்று. இயக்கங்கள் இதனை உணர்ந்து
தம்மை மாற்றிக்கொள்ளாவிடின் மக்களால்
நிராகரிக்கப்படுவதுடன் எதிரியினால் அழித்
தொழிக்கப்படவோ அன்றி போராட்டத்தி
லிருந்து விலகி ஓடவேண்டிவரும் என்பதை
புரிந்து கொள்ளவேண்டும். எனவே மக்
களை அராஜகத்திற்கும் அடாவடித்தனத்
திற்கும் எதிராக போரிடுமாறும், இன்றைய
தேவையை உணர்ந்து பரந்துபட்ட சக்தி
களை எதிரிக்கெதிராக ஐக்கியப்படுமாறு
கேட்டுக்கொள்கிறோம். ●

# இன்று நடப்பது தேசிய விடுதலைப் போராட்டமா?

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமா? எனும் கேள்வி சில இயக்கங்கள், வெகுஜன ஸ்தாபனங்கள் தனிநபர்கள் ஆகியோரால் கேட்கப்படுகின்றன. இக்கேள்விகளில் உண்மையை தேடிக் கண்டுகொள்ளும் நோக்கில் கேட்கப்படும் கேள்விகள், தங்களுடைய குழப்பம் காரணமாக கேட்கப்படும் கேள்விகள், தமது குழப்பத்தையும் விரக்தியையும் மற்றவர்களுக்கும் தொற்றவைத்து குழப்புவதற்காக கேட்கப்படும் கேள்விகள் என்பன அடங்கும். ஒவ்வொரு வகையினரின் கேள்விகளுக்கும் தனித்தனியாக பதிலளிப்பதை விடுத்து நாம் தேசிய விடுதலைப் போராட்டம் என்றுல் என்ன என்பதைப் பார்ப்போம்.

முதலாளித்துவத்தின் உருவாக்கத்துடன்தான் தேசம் என்ற கருத்து உருவானது. தேசம் என்றுல் என்ன? ஒரு பொது மொழி, பொதுப்பிரதேசம் (தனியான பிரதேசம்), பொதுவான பொருளாதாரம் என்பவற்றுடன் பொதுக் கலாச்சாரத்துடன் கூடிய பொதுமனவியல்பு கொண்ட வரலாற்று ரீதியாக நிலைபெற்றுவிட்ட மக்கள் குழுவையே நாம் தேசம் அல்லது தேசிய இனம் (Nation) என்கிறேம். சுதந்திரமான தேசங்கள் தொழிற்புரட்சி (முதலாளித்துவப் புரட்சி)க்குப் பின் முதலாளித்துவ சகாப்தம் ஆரம்பமான பின்பே உருவாயின. சுதந்திரமான தேசங்கள் உருவாவதற்கான போராட்டத்தையே நாம் தேசிய விடுதலைப் போராட்டம் என்கிறேம். தேசத்தின் வளர்ச்சிக்கு தடைசெய்யும் காரணிகளை அகற்றுவதற்கு நடத்தப்படும் எந்தப் போராட்டமும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியே. ஒரு நாடு (ஒரு தேசம் அல்லது தேசங்களின் சேர்க்கை) காலனித்துவச்சுரண்டலிற்கு உட்பட்டிருக்கும் போதோ அல்லது ஒரு பெருந் தேசியத்தினுல் இன்னெரு தேசிய இனம் ஒடுக்குமுறைக்குட்பட்டிருக்கும் போதோ தனது தேசத்தை விடுவிப்பதற்காக நடத்தப்படும் போராட்டத்தை நாம் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அம்சமாகவே பார்க்க முடியும். இந்த அடிப்படையிலேயே தமிழீழப் போராட்டத்தையும் பார்க்க முடியும். ஒரு போராட்டம் முற்போக்கானதா பிற்போக்கானதா என்பதை எப்படித் தீர்மானிப்பது குறிப்பிட்ட போராட்டம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உதவுவதாயின் அது முற்போக்கானது. சமூக முன்னேற்றத்தை தடுப்பதாயின், அதற்கு குந்தகமானதாயின் அப்போராட்டம் பிற்போக்கானது.

இலங்கைக்கு பெயரளவிலான சுதந்திரம் கிடைத்து மிகக் குறுகிய காலத்திலேயே தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை இன, மொழி, பிரதேச ரீதியாக ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக அதிகரித்து வந்தது. அன்றிலிருந்தே தமிழ் பிற்போக்கு சக்தியான தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் காங்கிரஸ் மலையக மக்களைக் காட்டிக்கொடுத்து துரோகமிழைத்ததைத் தொடர்ந்து தமிழரசுக்கட்சி உருவானது. ஆரம்பத்தில் தமிழ் தேசியவாத சக்திகளை பிரதிநிதித்துவ

படுத்திய தமிழரசுக்கட்சி, தமிழ் தேசிய வாதத்தை வளர்த்தெடுத்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்காமல் தமிழ் தேசியவாத சக்திகளுக்கு துரோகமிழைத்தது. தமிழரசுக் கட்சி தமிழ் பெரு முதலாளிகளின் கட்சியாக மாறியதுடன் சிங்கள அரசுடன் சரணாகதி மார்க்கத்தைப் பின்பற்றியது. தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரித்ததைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்களால் தமிழீழ கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்ட வழிமுறைகளில் தவறுகள் இருந்தன. அவை விமர்சிக்கப்படவேண்டியவை. ஆயினும் இவை முற்போக்கானவை. அரசு ஒடுக்குமுறையானது தமிழ் மக்களின் உயிருக்கு உத்தரவாதம் அற்ற நிலையை அடைந்தபோது தமிழீழப் போராட்டம் வெறும் உதிரியான நடவடிக்கை என்ற நிலையிலிருந்து நகர்ப்புற கெரில்லா நடவடிக்கை என்ற வடிவத்திற்கு மாறியதுடன் தேசத்தை விடுவிக்கும் போராட்டமான தேசிய தற்காப்பு யுத்தம் என்ற கட்டத்திற்கு மாறியது. தேசிய தற்காப்பு யுத்தமென்பது தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியே. தமிழீழ விடுதலை, மக்கள் விடுதலையாக அமையவேண்டுமாயின் தமிழீழ மக்கள் ஜனநாயக புரட்சியாக அமைதல் வேண்டும். தமிழீழப் போராட்டம் சகல பரிமாணங்களிலும் தேசிய விடுதலைக்கான முழுமையான அம்சங்களையும் கொண்டிராவிடினும் எமது தேசத்தை மீட்டெடுக்கும் போராட்டம் என்ற வகையில் இது தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு அங்கமே. மக்கள் ஜனநாயகப் புரட்சி என எதைக்கருதுகிறோம்? ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து விடுவிப்பது, பின்தங்கிய உற்பத்தி முறையான நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை முதலாளித்துவத்திற்கு முன்னைய உற்பத்தி முறைகளை இல்லாதொழித்து சுதந்திரமான உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு இடமளிப்பதுடன் மூலதனத் திரட்சி ஏற்படுவதற்கான சூழலை உருவாக்குவதே. இதனைச் சாதிக்க நாம் படிமுறை வளர்ச்சியினூடாக செல்ல வேண்டி ஏற்படலாம். இன்று நடைபெறும் போராட்டத்தை சரியான திசைவழியில் நகர்த்துவதனூடாகவே இது சாத்தியம். எமது உலக நோக்கில் முன்னெடுக்கப்படும் போராட்டத்தின் ஒரு பகுதியாக இன்றைய போராட்டம் இருக்கின்றது. தேசிய தற்காப்பு யுத்தத்தை நடத்துவதன் மூலமே அடுத்தகட்டத்திற்கு போராட்டத்தை முன்னெடுக்க முடியும். இன்று போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகளிடையே குறைபாடுகள் காணப்படுகின்றன. அராஜகம், குறுந்தேசியவெறி அந்நிய சக்திகளிடம் போராட்டத்தை தாரைவார்க்கும் போக்கு என்பன காணப்படுகின்றன. இத்தவறான போக்குகளை எதிர்த்து போராடும் அதே சமயம் சரியானவற்றை ஆதரிப்பதும் அப்போராட்டத்தில் நாம் உணர்வுபூர்வமான பங்குபற்றுவதுமே நாம் செய்யவேண்டிய பணியாகும். நாம் எமது விருப்பிலிருந்து போராட்டத்தைப் பார்க்கமுடியாது. ஒவ்வொரு சூழலிற்கும் ஏற்ப போராட்டம் வளர்ச்சிபெற்று முன்னேறுகிறது. இதனைப் புரிந்தால்மட்டுமே எம்மால் சரியான திசைவழியில் போராட்டத்தை முன்னெடுத்து மக்கள் விடுதலையை உறுதி செய்ய முடியும். ●

*மார்க்சியவாதிகளான நாம் எந்த ஒரு பிரச்சினையையும் அணுகும் போது யதார்த்த உண்மையில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். வெறும் வரைவிலக்கணங்களில் இருந்து அல்ல. இந்த உண்மைகளை ஆராய்வதன் மூலம் நமது வழிகாட்டும் கோட்பாடுகள் கொள்கைகள் வழிமுறைகள் ஆகியவற்றை வகுக்க வேண்டும்.*

# நூறாண்டு காணும் மே தினம்

( 01-05-1886 --- 01-05-1986 )

1886ம் ஆண்டு வைகாசி முதலாம் திகதி அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் 12 மணித்தியாலத்திற்கு மேல் வேலை வாங்கி தொழிலாளர்களை கொடூரமாகச் சுரண்டிய முதலாளிகளுக் கெதிராக, வேலை நேரத்தை 8 மணித்தியாலங்களாக குறைக்கக் கோரி தொழிலாளர்கள் போர்க்கொடி உயர்த்தினர்.

தொழிலாளர்களின் போராட்டத்தை நசுக்க அன்றைய முதலாளித்துவ அரசு தொழிலாளர்களை சுட்டுக் கொன்றது. அன்று தொடக்கி வைத்த போராட்டம் தொழிலாளர்களுக்கு 8 மணி நேர வேலை உரிமையை பெற்றுக் கொடுத்தது.

அன்று சிக்காக்கோ நகரில் தொழிலாளி வர்க்கம் சிந்திய குருதியில் தோய்ந்த செங்கொடியை ஏந்தி தொழிலாளி வர்க்கம் இன்று விடுதலைப்பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. குருதி நனைந்த மண்ணில் இருந்து முளைத்த விடுதலை மரங்கள் உலகெங்கும் வளர்ந்து வருகின்றது.

இன்றைய தினத்தில் உலகத் தொழிலாளர்களுடன் உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள், தேசிய விடுதலை இயக்கங்கள் மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். இத்தினத்தில் நாமும் உலகத் தொழிலாளர்களுடனும், சிங்கள தொழிலாள மற்றும் ஒடுக்கப்படும் மக்களுடனும் தோளோடு தோள் நின்று விடுதலைக்குரல் ஒலிக்கின்றோம். தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியை வென்றெடுப்போம் என சூளுரைக்கின்றோம்.